உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

## சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் மாதத் தமிழ்ப் பத்திரிகை

மலர் பன்னிரண்டு

**1939**


பத்திராசிரியர்

திரு. வி. உலகநாத முதலியார்

உதவிப் பத்திராசிரியர்

மா. துரைசாமி முதலியார்



சைவ சித்தாந்த மகா சமாஜம்

திருவருளகம், 22-வ, கல்லுக்கார தெரு,

மயிலாப்பூர், சென்னை.

சாது அச்சுக்கூடம்

இராயப்பேட்டை சென்னை.

சிவமயம்

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| அழிவழக்கிட்ட அந்தணர்—மயிலைகிழார் இளமுருகனார் | ... | ௪௧௧ |
| அறமது செய்யார் அரனைநினையார்—ஜி. சுந்தரமையர் | ... | ௨௩௩ |
| ஆணைவங்கொண்டார் ஆட்சி அடையார். ஷை | ... | ௩0௧ |
| இளைஞர் தலைவர் வரவேற்புப் பாடல்கள்—சி. எம். இராமச்சந்திர செட்டியார் | ... | ௨௨ |
| இளைஞர் மகாநாட்டுத் தலைவர் பேருரை—சைவப்புலவர் மணிவாசகனார் | ... | ௨௬ |
| இளைஞர் மகாநாட்டு வரவேற்புத் தலைவருரை —ரா. கிருஷ்ணமூர்த்தி | ... | ௨௩ |
| ஓர் உண்மை ஞானி—எஸ். வையாபுரி பிள்ளை | ... | ௫0௧ |
| கடைக்கொண்டிருமின் திருக்குறிப்பை—மு. ஞானப்பிரகாசம் | ... | ௧௮௫ |
| கணமங்கலம்—கோவைகிழார் | ... | ௪௭௧ |
| குருமொழி | ... | ௪௧௬ |
| கூத்தப்பெருமான் திருவெழுச்சி—மயிலைகிழார் | ... | ௫௫௩ |
| கொற்றுஅட்டி ஆளார்—ஈ. ந. தணிகாசல முதலியார் | ... | ௫௨0 |
| ,, ,, —ம. பாலசுப்பிரமணிய முதலியார் | ... | ௪௫௩ |
| கோள்வலிகொள்ளாச் செந்நெறி—எஸ். ஏ. அமிர்தகடேசுவரன் பிள்ளை | ... | ௪௩௭ |
| கோனாட்டுக் கொடிநகராம் கொடும்பாளூர்—ம. பாலசுப்பிரமணிய முதலியார் | ... | ௩௫௩ |
| கோனாட்டுக் கொடும்பாளூர்—சி. எம். இராமச்சந்திர செட்டியார் | ... | ௩௯௫ |
| சமாஜ உத்தியோகஸ்தர்கள் | ... | ௫௪ |
| சமாஜ விழா—காரியதரிசி | ... | ௫௬ |
| சிதம்பர விலாசம் | ... | ௨௨௫ |
| சிவசொரூபம்—சுதுமலை பொன்னுசாமி குருக்கள் | ... | ௨௩௯ |
| சிறுபுத்தியால் வாழ்க்கை கருதாதே—ஜி. கலியாணம் | ... | ௨௫௭ |
| சேரவாரும் சகத்தீரே—பத்திராசிரியர் | ... | ௨௮௯ |

பக்கம்

சைவ இளைஞர் மகாநாடு—ரா. கிருஷ்ணமூர்த்தி ... ௬0
சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் ௩௩-ம் ஆண்டு அறிக்கை ௫௧
சைவத் தேர்வு வினாக்கள் ... ௫௮௩
சைவர் யாவர்?—வித்வான் எ. ஆளவந்தார் ... ௧௪௩
ஞாலம் வணங்கும் ஞானச் செல்வர்—ம. பாலசுப்பிரமணிய முதலியார் ... ௫௪௫
ஞானமணி விளக்கு—இருக்கம் ஆதிமூல முதலியார் ௯௭, ௧௪௫, ௧௯௩
ஞானாமிர்தம்—விளக்கவுரை—ஔவை துரைசாமிப் பிள்ளை ௧௭௧, ௩௮௯
ஞானியார்—கே. கோதண்டபாணி பிள்ளை ... ௫௧௪
ஞானியார் மடத்தின் பொன்விழா—திரு. வி. கலியாண சுந்தர முதலியார் ... ௪௯௭
தசகாரியம் ... ௨௭௮
தருக்க சங்கிரக அகவல் ... ௫௬௯
தலைமைப் பேருரை (சமாஜம்) ச. சச்சிதாநந்தம் பிள்ளை ... ௩௬
,, ,, (தூத்துக்குடி)—த. வே. உமாமகேசுவரன் பிள்ளை ... ௬௫
தலைவர் வரவேற்பு வாழ்த்துப்பா—சி. எம். இராமச்சந்திர செட்டியார் ... ௧௯
தனி வல்லபமும் ஜீவனும்—சி. கதிர்வேலு முதலியார் ... ௫௨௯
தக்ஷிணாமூர்த்தி—மயிலைகிழார் ... ௫௧௮
தாயுமானார்—கச்சி முனிசாமி உடையார் ௩௨௩, ௩௮0
தியாகராசர் கழிநெடில் ... ௧௧௩
திருக்குறிப்பு—பத்திராசிரியர் ... ௪௪௯
திருக்குற்றாலக் காட்சி—ஜி. கலியாணம் ... ௮௭
திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்—திக்கம் - செல்லையா பிள்ளை ... ௫௬௩
திருமாற்பேற்றுத் திருப்பதிகவுரை—ஔவை - துரைசாமிப் பிள்ளை ... ௪௫௬
திருவாசகவுரை—சிதம்பர சுவாமிகள் ... ௫௨௩
,, —மா. வே. நெல்லையப்ப பிள்ளை
௧௩௧, ௧௮௪, ௨௩௧, ௨௮௩, ௩௩௭, ௩௪௯, ௪௩௩
,, —சு. முருகப்பபிள்ளை ... ௪௭௬
,, —மா. வடிவேல் முதலியார் ... ௩௯௮

பக்கம்

திருவாரூரர்—பி. தியாகராஜ பிள்ளை ௧௬௧ ௨௧௮, ௨௬௦, ௩௧௧

திருவாரூரர் என்ற கட்டுரையைப்பற்றிய ஒரு குறிப்பு—கோவைகிழார் ... ௨௮௬

திருவாவடுதுறைக் குருபரம்பரை ... ௩௨௮

தேவர்களைக் குறித்த வியாசம்—பாம்பன் குமாரகுருதாச சுவாமிகள் ... ௨௪௧

தேவார உரை—மா. வே. நெல்லையப்ப பிள்ளை ௧௨௬, ௨௯௯, ௩௭௭, ௪௪௩

நமது நாடும் கல்வியும்—எஸ். ஏ. அமிர்தகடேசுவரன்பிள்ளை ௨௧௧

நல்வணக்கப் பத்திரம் ... ௫௫௦

பச்சை மண்ணும் சுட்ட மண்ணும்—ம. பாலசுப்பிரமணிய முதலியார் ... ௧௭௭

பஞ்சகீதம்—சி. கதிர்வேலு முதலியார் ... ௫௭௭

பற்று—சைவம் ... ௨௯௨

பாவலர் போற்றும் நாவலர் திலகம்—ம. பாலசுப்பிரமணிய முதலியார் ... ௫௦௪

பொய்யடிமையில்லாத புலவர்—மா. வே. நெல்லையப்ப பிள்ளை ... ௧௩௬

பொறையுடைமை—ஜி. சுந்தரமையர் ... ௨௬௬

மலைக்கோயில்கள்—சி. எம். இராமச்சந்திர செட்டியார் ... ௫௨௫

மழநாட்டுத் திருமங்கலம் ,, ... ௫௫௬

மனமே கேள்—அ. மு. பரமசிவானந்தம் ... ௧௪௧

மனிதனின் நிலை—சி. கதிர்வேலு முதலியார் ... ௪௮௧

மாடக்கோயில்—கோவைகிழார் ... ௩௪௩

முத்திநிலையில் ஆணவத்தின் தன்மை—அ. சோமசுந்தரம் செட்டியார் ... ௨௦௯

வடதிருமுல்லைவாயிலும் பாலி நதியும்—ஈ. ந. தணிகாசல முதலியார் ... ௩௦௫

வரவேற்புரை—சி. கே. சுப்பிரமணிய முதலியார் ... ௧

விநாயகப் பிரபாவம்—ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் ... ௪௦௧

Reg. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.


| மலர் கஉ | வெகுதான்யஆண்டு தைத்திங்கள்<br>1939ஆ ஜனவரிமீ | இதழ் க |
|---|---|---|


வரவேற்புத் தலைவர்

திரு - C. K. சுப்பிரமணிய முதலியார், B.A. அவர்கள்

## சொற்பொழிவின் சுருக்கம்

அன்புடையீர்! ஐயன்மீர்! அம்மைமீர்!

நீவிர் எல்லீரும் வருக! வருக! நுங்களது வரவு நல்வரவாகுக, "மனிதர்காளிங்கே வம்", "முத்திதருந் தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே", "மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்! வம்மின்கள், வந்துடன் பாடுமின்கள்" என்றெல்லாமக்களையும் வாருங்கள் வாருங்கள் என

அறைகூவியழைத்துப் பேரின்ப வுணவூட்டிய பெரியோர் வழிவழி நாம் வந்தவர்களாதலின் அந்த வாசனைபற்றி நானும் உங்களை வருக! வருக! என்று அழைக்கின்றேன். தொண்டை நன்னாட்டுச் சான்றோர்களே! நடுநாட்டு நண்பர்களே! சோழ வளநாட்டுச் சைவப் பேரடியார்களே! பாண்டிநாட்டுப் பழ வடியீர்களே! ஏனை எல்லா நாட்டின் இன்னலமுடையார் களே! எல்லீரும் வாருங்கள். இம்மூன்று நாட்களும் சைவப் பெருவிருந்துண்டு பெருங்களிகூருங்கள்.

ஏழையேங்களது அழைப்பிற்கிணங்கிக் கூடியுள்ள இம் மாபெருங் கூட்டத்தைக் காண எங்களுக்கு மகிழ்ச்சி மிகப் பொங்குகின்றது. இந்த விடுமுறை நாட்களிலே வழக்கம் போல் நமது நாட்டிற் பல இடங்களிலும் பல வேறுவகைக் கூட்டங்கள் இதுசமயம் கூடிக் களிக்கின்றன. வெறும் வேடிக்கைகண்டு பணமும் மனமும் பறிகொடுத்துப் பொய் செய்து போதுபோக்கும் கூட்டங்கள் பல. அரசாங்கம் அதிகாரம் முதலிய வெறியாடல்களில் ஈடுபட்டுக் காலம் போக்குவதோடு மக்களைப் பல வழிகளாலும் அலைத்தொழிக்கும் கூட்டங்களும் பல. இரண்டுபேர் அல்லது அதிகமான பேர் கூடுவதெல்லாம் கூட்டம் தான். சட்டசம்மதமோ சட்ட விரோதமோ எப்படி யானாலும் எல்லாக்கூட்டமும் அறிஞர்களாற் கூட்டம் என மதிக்கப்படமாட்டா. பிற எல்லாம் வீண் கூட்டம் - சந்தைக் கூட்டம் - வெறுங்கூட்டம் - பேய்க்கூட்டம் - கொள்ளைக்கூட்டம் முதலியனவா மொழிய ஒன்றனையே கூட்டம் என அறிஞர் கூறுவர். இதனைப்பற்றி நம்பியாண்டார் நம்பிகள் "நீடிய சீர்த் திருஞானசம் பந்தனிறைபுகழா, னேடிய பூந்திரு நாவுக் கரசோ டெழின்மிழலைக் கூடிய கூட்டத்தி னுலுளதாய்த் திக் குவலயமே" என ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி யில் இதற்கு ஒருவரையறை வகுத்துக்காட்டினார். தெய்வச் சைவ அடியார் கூட்டமே கூட்டமெனப்படும். இதுவே உயி ருக்கு ஆவனவற்றைத் தேடுவது. பிற எல்லாம் உடம்போடு ஒழிவனவாம். இக்கூட்டங்களே உலகத்தை நிலைபெறுத்தி உறுதிதருவன. இக்கூட்டமொன்றே உடலுக்குச் சோறிட்டு

கூட்டங்கள்

வளர்க்கும்; உயிரையும் சோறுதந்து வளர்க்கும். ஏனையவை பொருளல்லாதவற்றைப் பொருளாகக் கருதுவன என்பதாம். ஏதாவதொரு கூட்டத்தைக் கண்டபோது இது உடம்போடு ஒழியும் கூட்டமா? உடம்போடு நில்லாமல் உயிருக்கும் சோறுதரும் கூட்டமா? என்றதொரு விசாரணை நமக்குள் கிளம்புமானால் நன்மை பயக்கும்.

நமது சமாச மாபெருங்கூட்டங்களில் வரவேற்புத்தலைவர்கள் - அவைத்தலைவர்கள் என இதுவரை அறுபத்து நால்வர் சைவ சித்தாந்தத்தைப்பற்றி விரிவாய்ப் பேசியிருக்கின்றார்களே! அக்கூட்டங்களில் நின்று சைவம் பேசிய தமிழ் வாணர்களும் பலரே. தனிக்கூட்டத் தலைவர்களும் இதனைப்பேசியிருக்கின்றார்களல்லவா? இவற்றின் மேல் இன்றைக்கு எனக்கு இது பற்றிப்பேச எதை அவர்கள் மீதம் வைத்திருப்பார்கள்? ஆனால் இன்னும் ஓர் ஐம்பதாண்டு கழிந்து நிகழும் ஆண்டு விழாவில் என்னைப்போல் வரக்கூடியவர் என்னைவிட அதிக சங்கடப்படுவார் என்று எண்ணி நான் அவரைவிட எத்தனையோ வசதி பெற்றுள்ளேன் என்று ஆறுதல் பெற்று அமைந்து என்னுள்ளே மகிழ்ந்து கொள்வேன்.

**சைவ சித்தாந்தமாவது யாது?**

சிவசம்பந்தமாவது சைவம். சைவத்தின் முடிந்த கொள்கைகள் சித்தாந்தம். சிவாகமங்கள் சித்தாந்தம் என்பர் சர்வாத்மசம்பு சிவசாரியார். உலக சிருஷ்டியைப் பற்றியனவாய், ஒருநாள் பிறந்து - சிலநாளிருந்து - ஒருநாளிகந்துகழியும் வாழ்க்கையைப் பற்றியனவாய், அப்படிக்கழிந்தும் என்றும் நிலைத்திருக்கும் என எண்ணச்செய்யும் மயக்கத்தைப் பற்றியனவாய் - வானவீதியிற் காணப்படும் சூரியன் முதலிய எண்ணிறந்த அண்டங்களைப் பற்றியனவாய், இவையாவும் அனுசரித்துவரும் விதிகளைப்பற்றியனவாய், அவ்விதிகளை விதித்து அப்படி நடத்தும் கர்த்தாவைப் பற்றியனவாய் அறிவுடைய பல மனிதர்கள் பல காலங்களில் பல நாடுகளில் எண்ணியுள்ளனவாய் இனியும் எண்ணுதற்குள்ளனவாய் உள்ள எல்லாம் கூடிய தொகுதிக்கு நாயகமாய் நின்று, உண்மைகளை முடித்துக் காட்டுவது சைவசித்தாந்தம்

என நான் சொல்வேனுனல் அது முழுவுண்மையேயாகும். ஆனுல் இப்படி எண்ணுவனவும் சொல்வனவும் பல நாட்டில் பல காலத்தில் பல பேதங்கள் படக் காண்கின்றேமே! அவற்றில் யாது பொருள்? என்று கேட்டால் இவை ஒன்றே டொன்று மாறுபடக் கண்டாலும் தான் ஒன்றேடும் மாறு படாது எல்லாவற்றையும் தன்னுள்ளே படிமுறையில் வகுத்துக் காட்டித், தான் ஒன்றினுமடங்காது எல்லாவற்றிற் கும் மேலாகிய படியை உணர்த்துவது எதுவோ அதுவே நமது சைவ சித்தாந்தமாம்.

"ஓதுசமயங்கள்பொருளுணரு நூல்கள்
ஒன்றேடொன் றெவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாதுசமயம் பொருள்நூல் யாதிங் கென்னில்
இதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினு லிவையெல்லா மோரிடத்தே காண
நிற்பதுயா தொருசமய மதுசமயம்; பொருணூல்;
ஆதலினு லிவையெல்லா மருமறையா கமத்தே
யடங்கியிடு மவையிரண்டு மரனடிக்கீ ழடங்கும்"

என்று பலரும் பலமுறை எடுத்துக்கூறிய பழம் பாட்டைப் புதுக்கி உங்களிடம் திருப்பிச் சொல்ல நான் எண்ணவில்லை.

இப்படியாயின் எல்லாச் சமயமும் ஒன்றுதானே? ஒரு சமயம் மற்றென்றை வெறுத்துப் பகைமை பூணுவானேன்? திருஞானசம்பந்த சுவாமிகள் வாதம்செய்து சமண சமயத்தை யழித்ததற்கு என்ன நியாயம்? அவரும் மாணிக்கவாசகப் பெருமானும் பௌத்தவாதம் செய்து பரமத நிராகரணம் செய்வானேன்?

**சைவமும் பரசமயப் பிரவேசமும்**

"நமண நந்தியுங் கருமவீரனும் தருமசேனனு மென்றிவர்
குமண மாமலைக் குன்றுபோல் நின்று தங்கள் கூறையொன் றின்றி
ஞமண ஞாஞண ஞாண ஞோணமென் றோதி யாரையு நாணிலா
வமண ராற்பழிப் புடைய ரோநமக் கடிக ளாகிய அடிகளே" [யே

என்றின்னவாறு நம்பியாரூரரும்; "உறிமுடித்த குண்டிகைதங் கையிற் றாக்கி யூத்தைவாய்ச் சமணர்க்கோர் குண்டாக்கனுய்க், கறிவிரவு நெய்சோறு கையி லுண்டு

கண்டார்க்குப் பொல்லாத காட்சி யானேன் " என்றிவ்வா றெல்லாம் அப்பர் சுவாமிகளும் இகழ்ந்துரைக்கின்றார்களே? பிசுக்கரை - பிரட்டரை - பொக்கரை என்றெல்லாம் புதிய புதிய வசைகளால் திருமாளிகைத் தேவராற் பேசப்படு கின்ற பேறு இவர்களுடைய தாயிற்றே? இவ்வாறெல்லாம் எந்தம் சைவப்பெரு மக்கள் பிற சமயத்தை யழித்தும் பழித்தும் வருதல் ஏன்? என்பார் பலர். ஒரு தாய் வயிற் றுதித்த மக்கள் போன்ற பல சமயங்களை எல்லாம் ஒன் ருய்ப் பாவிக்கமாட்டாது பகைமை பாராட்டி வருவா னேன்? என்பார் பலர். சைவ சமயவுண்மை நிலை யும் பரமாசாரியர்களினது சரிதமும் அவர்களது திரு வுளப் பாங்கும் அறியாமலே நம்மிற் சைவர் என்பவர்கள் பலருங்கூட இத்தகையகேள்விகேட்கத்தலைப்படுகின்றார்கள். அந்தந்தச் சமயங்களும் சைவத்திற்கு அமையும் என்றால் அங்கங்களும் முழுவுடலும் ஒன்றாகுமா? அங்கங்களுள்ளும் ஒன்று மற்றொன்றாகுமா? கை காலாகுமா? கால் தலை யாகுமா? இந்த பேதத்தைபுங் கூட உணராது எல்லாம் ஒன்று என்பது ஐயனுக்கும் பையனுக்கும் ஒரே வாக்கு - ஓட்டு; அறிவில்லாதவனும் ஒன்று ஞானியும் ஒன்று என்னும் நவீன தேர்தல் பைத்திய ஏற்பாட்டின்படி கூடுமே யல்லாது அறிவாளிகள் கூற்றாகாது. காலணா ஒரு ரூபா யில் அடங்கியதென்பதுண்மை. ஆனால் காலணா ஒரு ரூபாயாகாதல்லவா? பரம காருண்ய மூர்த்திகளான சைவ சமய பரமாசாரியர்கள் செய்த பரசமய நிரா கரணங்களின் வரலாற்றைச் சரியாய்த் தெரிந்துகொள்ளா மல் அநேகர் மாறுபட நினைக்கின்றார்கள். சைவத்தில் நின்ற பாண்டி நாட்டைச் சமணம் கைப்பற்றிக் கொண் டதனையே மீட்டுக் கொடுத்தருளினார் திருஞானசம்பந்த சுவாமிகள். சமணர்கள் கழுவேறினது தாங்களாகவே பந்தய மிட்டுச் செய்துகொண்ட காரியம். தில்லைச்திருச்சபை யில் பௌத்தசமயத்தை நாட்டும்படி கொடிகட்டி வாதுக் கழைத்து வம்புச்சண்டைக் கிழுத்த புத்தனையே வாதம் செய்து வென்றருளினர் மணிவாசகனார். தமது சமயப்பிர

வேச உரிமையை மறுத்துப் பற்பலவாறு கொடுமை செய்தும், சிவன் கோவில்களை மறைத்துச் சமணர் பாழிகளாகச் செய்தும் வன்மை புரிந்த சமணர்களை அகிம்சைத்தருமத்தால் வெற்றிபெற்று வென்றருளினர் நம் அப்பர்சுவாமிகள். சைவமாகிய நமது சொத்துக்களை அன்னியர் அபகரிக்காமல் காப்பாற்ற வேண்டியது சொத்துக்குடையவர்களாகிய நமது கடமையே யன்றோ? உயர்ந்த பி. எ. வகுப்பில் தாழ்ந்த 4-வது வகுப்புக்காரர்கள் புகுந்து உட்கார்ந்து கொண்டால் அவர்களை உடனே அங்கிருந்து வெளிப்படுத்தி விடுவார்களன்றோ? அது குற்றமாகுமா? ஆனால் இக்காலத்துச் சைவர்களாகிய நாம், நம்மில் எத்தனை பேர் தான் கிறித்தவர் மகமதியர் முதலிய அன்னிய மதம் புகுந்தால் நமக்காவதென்ன என்று விரிந்த நோக்கம்கொண்டு "எங்கெழிலென் ஞாயிறு? எமக்கேலோ ரெம்பாவாய்" என்ற கடைசியடியின் ஒருபாதியை மட்டும் கடைப்பிடித்து நிற்கின்றோம். இந்நாட் காந்தியவர்கள் முதலியோரும், திருவிதாங்கூர் மன்னரும் ஆதரிக்கும் ஆலயப் பிரவேசக் கேள்வி இதையே அடிப்படையாகக் கொண்டு நிற்கிறது என்கின்றார்கள். சுத்தியென்ற கொள்கையைப் பரவச் செய்து இந்துக்களாயிருந்து மகமதியம் புகுந்தவர்களை மீள இந்துக்களாக்கிய கொள்கை பரப்பி அதனால் தம் உயிரைப் பறிகொடுத்த சிரத்தானந்த சுவாமியும் அவருயிரைப் பறிகொண்ட மகமதிய வாலிபனும் தத்தம் மதத்தை அன்னியர் கைப்பற்றாமற் பாதுகாக்கும் இந்த ஒரே நோக்கங் கொண்டவர்களல்லவா?

**சைவ சித்தாந்தம் என்ன செய்யும்?**

சைவ சித்தாந்தமாவது என்னை எனக்கறிவிக்கும் என வேடிக்கையாயும் விநயமாயும் கூறுவர் அறிஞ்ஞோர். "என்னை யாரென்று நினைத்தாய்? என்னைத் தெரியுமா உனக்கு?" என்றான் சண்டையில் கோபத்துடன் எழுடி உயரமுள்ள பெரிய ஆள் ஒருவன். அவனுடைய எதிரி எனக்கு உன்னைத் தெரிவது இருக்கட்டும்; உன்னை உனக்குத் தெரியுமா? என்றான் என்று ஒரு கட்டுக்கதை யுண்டு. "மண்ணுதி யாறாறு மனந்தழாவித் தடுமாறிப், புண்ணாகி எனைக்

காணா துழல்கின்றேனை......யான் யாமெனென் றெண்ணா எனைத்தந்தாய்" என்றும்; "நாடியோ என்போ நரம்பு சீக் கோழையோ தேடி யெனையறியேன்" என்றும், "மேவிய புன்மயிர்த் தொகையோ? வம்மயிர், பாவிய தோலின் பரப்போ? தோலிடைப், புகவிட்டுப் பொதிந்த புண்ணோ? புண்ணிடை, யூறுமுதிரப் புனலோ? கூறுசெய், திடையிடை யொழுகும் வழும்போ? எலும்பிடை, முடைகெழு மூளை விழுதோ? வழுவழுத், துள்ளிடை யொழுகும் வழும்போ? மெள்ளநின், றூரும் புழுவி னொழுங்கோ? நீரிடை, வைத்த மலத்தின் குவையோ? வைத்துக், கட்டிய நரம்பின் கயிறோ? வுடம்பிற்குட், பிரியா தொறுக்கும் பிணியோ? தெரியா, தின்னதி யாமெனென் றறியே! னென்னை, யெங்குந் தேடினேன்; யாதினுங் காணேன்;" (திருவிடை-மும். கோவை 13) என்றும் பெரியோர்கள் அருளியிருக்கின்றார்கள். இவ்வாறு தன்னைத் தேடுதல் சைவசித்தாந்தத்தின் பெருவேலையாம். என்னே புதுமை! இந்நாள் நாகரிகவுலகர் இது கேட்டால் நகைப்பர்! உலகர் யாரும் ஒருவகையில் தம்மையே தெரிகின்றார்கள். இன்னும் பார்த்தால் தன்னைத் தவிர வேறொன்றும் அவர்களுக்குத் தெரிகின்றதில்லையே!

இத்தாலி - அபிசீனியா சண்டை, ஜெர்மன் - செக்கோ போர் - ஜெப்பான்-சீனா யுத்தம், (அவ்வளவு தூரம் போவானேன்?) நம் நாட்டில் அரசாங்கக் கிளர்ச்சிச் சண்டைகள், சில்லரைத் தேர்தல்கள், முதலிய சகல கட்சிவிரோதச் சண்டைகள் என்று இவ்வாறு ஒவ்வொன்றும் ஒவ்வொருவரும் தன்னையே கண்டு வேறொருவனையும் காணாததால்வந்த கேடுகளேயன்றோ?

நம்மை நாமறிந்தால் உண்மை கண்டவர்களாவோம். அதுவரையில் பொய்யே கண்டு பொய் செய்து போது போக்குபவர்களேயாவோம். இம்முயற்சியைக் கண்டால் உலகத்தார் சைவசித்தாந்திகளை உலகத்துக்குதவாத வீணர்களென்று சொல்லக்கூடும். நாமும் அவர்கள் "ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து, காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே"

என்று திருப்பிச் சொல்லுவோம். "நாடவர் நந்தம்மை யார்ப்ப வார்ப்ப நாமுமவர் தம்மை யார்ப்ப வார்ப்ப" என்ற திருவாசகப்படி நாட்டவர்களையெல்லாம் நோக்கி உங்கள் ஓட்டம் ஆட்டம் முயற்சி யெல்லாம் "யோசிக்கும் வேளையில் பசி தீர உண்பதும் உறங்குவதுமாக" முடிகின்றதே; இதிலேயே உங்கள் வாழ்க்கையை முடிவடையவிட்டு மிருகங்களோ டொப்ப வீண்காலம் போக்கும் வீணர் நீங்களே என்போம். ஆனால் மேலே கண்டபடி உண்மை தெரிவதெப்படி? அதற்குப் பெருமுயற்சி செய்யவேண்டுமே? என்றால், இல்லையில்லை; சிறு முயற்சியே போதும். என்னை? உலக போகங்களையும் உடைமைகளையும் விட்டுத் துறவிகளாகும்படி சொல்வார்கள் என்றெண்ணவேண்டாம். உடம்பையும் வேறெதனையும்விட வேண்டிய அவசியமில்லை. அறுபத்துமூவர்களாகிய உண்மை நாயன்மார்கள் பலரும் உலகத்தோடு உத்தியோகத்தோடு, உயர்பதவியோடு, மனைவி மக்களோடு இருந்து வாழ்ந்தார்களன்றோ?

"உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே யுத்தமன் கோயில்கொண் டானென்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே"

என்று உடலைக் காப்பாற்றவே திருமூலர் திருமந்திரம் உபதேசிக்கின்றது. உடம்பினுள்ளே இருக்கும் உயிரையும், உயிரைத் தாவியிருக்கும் உத்தமனையும் தெரிதல் வேண்டும். அதற்கும் அவனருள் வேண்டும். அவனது திருவருள் கிடைத்தால் எல்லா உண்மையையும்காணலாம். 'நின், தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின், மாயப் படலங் கீறித் தூய, ஞான நாட்டம் பெற்றபின் யானு, நின் பெருந்தன்மையுங் கண்டேன்; காண்டலு, மென்னையுங் கண்டேன்; பிறரையுங் கண்டே, னின்னிலை யனைத்தையுங் கண்டே; னென்னே? நின்னைக் காணா மாந்தர், தன்னையுங் காணாத் தன்மையோரே" என்றருளினர் பட்டினத்தடிகள்.

மேற்கூறியபடி நில்லாத பொருள்களை நிலைத்தனவென்று கொண்டு கட்டியழுது கொண்டிருக்கும் மக்களைச் சைவ சித்தாந்தமானது, அவற்றின் விலகி அழியாப் பொருளை அறிந்து கொள்ளும்படி செய்யும். "போகம் வேண்டி வேண்டிலேன் புரந்த ராதி யின்பமும்" "வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன் விண்ணும் மண்ணும், வேண்டேன் பிறப்பிறப்பு" என்ற நிலையை விளக்குமாதலின் நவீன தேர்தல்களிலும் பிற அரசியல் முதலிய பல துறைகளிலும் சண்டையிட்டுக் காலங்கழிப்பதைத் தடுக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ?

"தன்னைப் பெறுவதின்மேற் பேறில்லை தானென்றும்
தன்னைத்தான் பெற்றவன்றா னென்னிற்—றன்னாலே
எல்லாந்தன் னுட்கொண்டு கொண்டதனைக் கொள்ளாதே
எல்லாமாய் நிற்கு மிவன்"—திருக்களிற்றுப்படியார் - 45.

**சைவ சாதனங்களும் அவற்றின் அவசியமும்**

இந்த உண்மைஞானம் எதனால் வரும்? எந்தக் காரியத்தைச் சாதிக்க வேண்டுமானாலும் அதற்கு ஏற்ற சாதனம் வேண்டுமல்லவா? அதுபோல இவ்வரிய பொருள் தேடிக் கொள்ளுதற்கு ஏற்ற சாதனங்களைப் பெரியோர் வகுத்து வைத்து வழியும் காட்டியிருக்கின்றார்கள்.

"தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றயிரங் கூறிட்
டத்திலங் கொருகூ றுன்கண்வைத் தவருக்
கமருல களிக்குநின் பெருமை"—திருவிசைப்பா.

என்றபடி உடம்பைப்பற்றி யொழியும் உலக போகங்களில் வைத்த அன்பில் ஒரு சிறிய பாகமாயினும் உயிரைப்பற்றிய சன்மார்க்கத்தில் வைத்தோமாகில் பெரிய நன்மை தரும். நம் உயிர்க்குயிராகிய இறைவனிடத்தில் இருபத்து நாலுமணி நேரங்கொண்ட ஒரு நாளில் ஒரு கால்மணி நேரமாவது உறுதியாகிய அன்பு செய்கின்றோமா? எனில், இல்

லவேயில்லை. அங்ஙனம்விடாது சிறிது சிறிதாகவாயினும் அன்புசெய்து அவனும் அவனருள்பெற்ற பெரியோர்களும் வகுத்த நூல்களின்படி உருத்திர சாதனங்களைக் கைக்கொள்ளுதலும்வேண்டும். அவையாவன: விபூதி உருத்திராக்கங்கள் - சடைமுடி - பஞ்சாட்சரம் முதலியன. சைவனுக்கு விபூதியணிதலும் உருத்திராக்கம் பூணுதலும் அவசியம் தானா? என்று இன்னும் ஆராய்ந்து முடிவுகட்ட வேண்டிய நிலையில் தானே நாம் இருக்கின்றோம். எதையும் ஆராய்ந்து முடிவு செய்தல்தான் சிறந்தது. ஆனால் எந்த ஆராய்ச்சிக்கும் ஓர் எல்லையுண்டு. ஆராயாமலே ஒப்புக்கொண்டு நடக்க வேண்டியவைகளும் பல உண்டு; ஆராய்ச்சி நின்றுவிட வேண்டிய இடமும் உண்டு. தன்னுடைய தாயையும் தந்தையையும் ஆராய்வார் உண்டா? பால் நல்லதா? கெட்டதா? என்று ஆராய்ந்து தெளிந்தபின் குடிக்கிறதானால் குழந்தை பிழைப்பதெப்படி? "கேட்பான் புகிலளவில்லை கிளக்கவேண்டா", "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலு மிக்குச், சோதிக்க வேண்டா சுடர்விட்டுளனெங்கள் சோதி, மாதுக்க நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின்" என்ற ஆளுடையபிள்ளையார் அருளிய திருப்பாசுரங்கட்கு ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் "ஓதுமெல்லையுலப்பில வாதலின் யாது மாராய்ச்சி யில்லையாமென்றதாம்" "இன்ன தன்மையேது வெடுத்துக்காட், டன்னவாற்று லளப்பில னென்றதாம்" என்று விரிவுரை செய்தருளினார்கள்.

'விபூதியணிவாய்' என்று நமது தம்பியிடம்சொன்னோமானால் பெரியபுராணத்தை அரைகுறையாய்க்கேள்விப்பட்டவர்களது வாசனையுள்ளேபட்ட அவன் "சாக்கிய நாயனார் விபூதி பூசினாரா?" என்று கேட்கின்றான். அன்பே சைவம் ஆதலின் சைவனானவன் முதலில் கொலையும் புலையும் தவிர்க்கவேண்டியது அவசியம் என்று சொல்லப்புகுந்தோமானால் கண்ணப்ப நாயனார் மாமிசம் சாப்பிடவில்லையா? அவர் ஊட்டிய இறைச்சியை இறைவர் உண்ணவில்லையா? என்ற அரைப்படிப்புக் கேள்வி உடனே புறப்படுகின்றது. அப்போதைக்கு நம் தம்பிகள் எல்லாரும் சாக்கிய நாயனாரும், கண்ணப்ப நாயனா

ரும் ஆகிவிடுகின்றார்கள். "அரியறியா மலர்க்கழல்கள் அறியாமை அறியாதார்" என்றபடி சாக்கிய நாயனார் இறைவனை நினைப்பதை மறக்கவில்லையே? நாமோ நினைக்கின்றதே யில்லையே. கண்ணப்பர் இறைவனைத் தவிர வேறொன்றும் அறியவில்லை. நாம் நம்மைத் தவிர வேறொன்றும் அறிவதில்லை; இறைவனைத்தவிர வேறெல்லா மறிகின்றோம்.

விபூதியின் விதி யிதுவானால் உருத்திராக்கக் கண்டிகையைப்பற்றிக் கேட்க வேண்டியதில்லை. சைவர் என்று சொல்லிக்கொள்வோர் நூற்றிலொருவர் விபூதியணியக் காண்போமானால், அவருள் ஆயிரத்திலொருவர் கண்டியணியக் காண்பது அரிதாயிற்று. விபூதி உருத்திராக்கங்களைச் சிவசாதனமாகக் கொண்டு அணிந்து தாம் பயன் பெறாவிட்டாலும் அணிவாரைத் தூற்றியும், பரிகாசம் செய்தும் அவமானம் செய்யாம லிருந்தாற் போது மென்று சொல்வேன். "ஆதியரு மறைவழக்க மருங்கியரனடியார்பாற், பூதிசா தனவிளக்கம் போற்றல்பெறு தொழியக்கண் டேதமில்சீர்ச் சிவபாத விருதயர்தா மிடருழந்தார்" என்பது பெரியபுராணம். திருநீற்றுப் பதிகத்தில் திருநீற்றின் பெருமையைத் தமது மெய்த்திருவாக்கினால் ஆளுடைய பிள்ளையார் அருமையாய் அருளி யிருக்கின்றார்கள். காணுங் கண்ணும் கருத்துமுண்டானால் அதன் பயனையும் பெருமையையும் இன்றும் வெளிப்பட அநுபவத்திற் காணலாம்.

நம்மில் ஆலய தரிசனஞ்செய்யும் சிலரும் அங்குத் தரப்படும் விபூதி குங்குமப் பிரசாதங்களைக் கோயில் தூண்களில் இட்டு அலங்கரித்து மகிழ்ந்துவிடுகின்றார்கள். கோவில் தூண்களும் சுவர்களும் அல்லவோ நமக்குப் பிரதிநிதிகளாய்ச் சிவசின்னங்களை அணிந்துகொள்கின்றன. மிக அரிதில் வருந்திப்பெற்ற ஆலயத்திருநீற்றை வாயில் ஊதிவிடுவாரும், வறிதே நிலத்தில் வீழ்த்தி விடுவாரும் பலர் உண்டு. இவர்களைவிடக் கீழே சிந்த அஞ்சித் தூண்களில் அணிவோர் மேலோர்களே என்னலாம்.

இனி, மற்றொரு பெருஞ்சாதனமாகிய திருவைந்தெழுத்தைப்பற்றிக் கேட்கவே வேண்டுவதில்லை. தன்னலம் என்பது நாம் விதிப்படி எண்ணும் ஐந்தெழுத்தாயிற்று. பணம் என்பது நமக்கு விதியின் அமைந்த வியட்டிப் பிரணவமாயிற்று. ஐந்தெழுத்தின் ஓதுமுறையும் நிற்குமுறையும் அவற்றின் உள்ளீடும் நம்மில் யாவர் அறிகிறோம்? இந்த ஐந்தெழுத்து முதலிய சைவமந்திரங்கள் குறில் நெடில் ஒற்று முதலாக மாத்திரையளவு குறிக்கும் குறியீடுகள் தா மென்று கூறும் ஆசிரியன்மார்களும் இக்காலத்துளராயினர் !

இனிச் சிவநெறிகாட்டும் சாதனங்களிற் சிறந்ததாகிய குருவைப்பற்றிப் பேசுவோமாலுல் அது பெருமோசமேயாகி முடியும். முடிபாய்முடிந்த ஒன்பதாந் தந்திரத்திலும் இன்னும் பல இடங்களிலும் குருமட தரிசனம் என்பது முதலாக இதுபற்றிப் பலவுண்மைகள் சிறக்கப் பேசினார் திருமூலர். குருவின் உபகாரத்திற்கு 12 சூத்திரங்களில் 8-ம் சூத்திரத்தை ஒதுக்கிவைத்தது சிவஞான போதம். குரவனாருருவின்றியிக் கொடியவெம் பாசம் கேள்வியாற் கடப்போம் என்றது கடலைக்கையால் நீந்தினவன் காரியமாகும் என்று துணிந்து மணிவாசகப் பெருமானார் குருவைத்தேடியலைந்தனர். தமது தமக்கை புனிதவதியாராகியசற்குருவின் சற்பாவனை முதலிய உபகாரத்தால் திருநீறணிந்து பஞ்சாக்கர உபதேசம் பெற்று அதன் வழியே சைவசமயப் பெருங்குருவாகி விளங்கினர் அப்பர்சுவாமிகள். "தென்முகத்தின் முகமாயிருந்த கொலு வெம்முகத்திலும் வணங்குவேன்" என்று சர்வாதி குருவுக்கு வணக்கம் கூறினர் தாயுமான சுவாமிகள்.

இப்போது குரு என்றால் நமக்குப் பெரியமடமாகிய கட்டிடங்களும், எருது, யானை, குதிரை ஒட்டகம் முதலிய பிராணிகளும், வைரம் தங்கம் முதலிய உலோகங்களும் எடுபிடி சாமான்களும், பல்லக்கு முதலிய யானங்களும் நினைவிக்கு வருகின்றனவேயன்றி, நூல் ஞானமும் உண்மை அறிவொழுக்கமும் நினைவுக்கு வருகின்றதேயில்லை. மடத்திலே குருவிருப்பார் என்றெண்ணுகின்றோமே யன்றிக்

குருவிருக்கும் இடமே திருமடமாம் என்றஉணர்ச்சி உண்டா கின்றதில்லை. மடாலயங்களை ஞானதானம் செய்யுமிடங் களாக நினைப்பதை நாமும் மறந்து விட்டோம்; அங்கிருப் பவர்களும் மறந்தனர்.

சைவத்திற்குப் புகலிடம் திருக்கோயில்களும் குருமடங் களுமாம். இன்னொரு பெரும்பற்றுக் கோடும் உண்டு. அதா வது திருவேடம் என்பர். குருமடங்களைப் பற்றி மேலே குறித்தேன். திருக்கோயில் களின் நிலைமை மேலும் வருந்தத்தக்கது. "கோயி லில்லா வூரிற் குடியிருக்க வேண் டாம்" என்றும்,...."பாங்கினொடு பலதளிக ளில்லாவூரும்...அவையெல்லாமூரல்லஅடவி காடே" என்றும் உபதேசம் பெற்ற வழிவழிவந்தநாடு நமது புண்ணிய நாடாகும். கோயில்களைக் கடைக்கால்காண இடி த்து அப்புறப் படுத்தினால் நாடு செழிக்கும் என்று கொண்டு இப்போது பலமேனாடுகள் அவ்வாறே செய்தும்வருகின்றன. ஆனால் அந்தக் கொள்கை நம்நாட்டில் அதிகமாக இன்னும் பரவவில்லையாயினும், கோயில்கள் எப்படிப் போனாலும் எமக்கென்ன? கோயில் வழிபாட்டுக்கும் சைவத்துக்கும் சம் பந்தமில்லை-என்றிருக்கும் மனநிலை பரவி வருகின்றபடியால் கோயில்கள் கவனிக்கப்படாமல் பாழடையப் பார்த்து வரு கின்றோம் என்பதை மறுக்க முடியாது. சிற்சில பெருங் கோயில்கள் தவிர ஏனையவெல்லாம் மனிதர் புகாத நிலையில் உள்ளனவேயாம். பெருங்கோயில்களிலும் பெரும்பாகங்கள் கும்பிடுவதற்கன்றி வியாபாரத் தலங்களாகவும் வேறுவேறு விடயங்களுக்காகவும் பயன்படுத்தப் படுகின்றன. பலவிடங் கள் மனிதர் புகாமலே பாழாய்க்கிடக்கின்றன. 'நம்பி முதல் திருவலகு வரை' என்ற பழமொழிப்படி கோயிற்பணியா ளர் பலரும் வரும்படிதவிர அந்தக்கோயில்களைப் பற்றிய அறிவு சிறிதும் இல்லாது அஞ்ஞானத்தில் அமிழ்ந்து கிடக் கின்றார்கள். கும்பிடச் செல்வோர்களோ என்றால் பெரும் பாலும் அவர்களிடம் கேட்டு அறிய வேண்டியவர்களாய்

**சைவத்தின் தற் கால நிலைமை யும் சைவ சித் தாந்திகளின் கடமையும்**

அதைவிட அதிகம் அறியாமையில் ஆழ்ந்துள்ளார்கள். பல கோயில்களில் வணங்கப்படும் மூர்த்திகளின் வரலாறு விசாரித்தாலும் தெரிவதில்லை. கோயிற்பணியாளர்கள், அதிகாரிகள் இவர்களின் அறிவுக்குறைவும் தொழிலின் முறையும்பற்றி அறிந்த நமது மந்திரியார் பரிவுகொண்டு பல இடங்களிற் பரிகாசமும் செய்து வருகின்றார். ஆனால் அதற்குப் பரிகாரம் மட்டும் தேடினதாகக் காணப்படவில்லை.

கோயில்களும் மடங்களும் இவ்வாறாகவே, திருவேடம் என்ற சங்கமங்களின் நிலை சொல்லவும் வேண்டுமா? மற்ற இடங்களில் அப்பிரகாசமாய் இருக்கும் இறைவன் திருவேடத்தில் பிரகாசமாய் நின்று விளங்குகின்றான் என்றும், உணர்தற்கெட்டாத தன்னை உலகத்துள்ளார் அறிதற் பொருட்டுத் திருநீறு கண்டிகை முதலிய திருவேடமாகிய தனது திருவடிவத்தைத் தன் அன்பர்க்குக் கொடுக்கின்றான் என்றும் நாம் உணர்கின்றோமா? சிவசாதனங்களில் நம்பிக்கை யிழந்து கொண்டேவரும் நம்மைத் திருவேடமானது வசீகரிப்பதெப்படி? காமக்கிழத்தியர் வடிவிற் காணப்பெறும் ஆடை சாந்து அணிகலன் முதலாயின காமுகரை வசீகரித்து இன்பஞ் செய்யுமாறு போலத் திருவேடமும் சிவாலயமும் நம்மை வசீகரிக்க வேண்டும் என்று சிவஞான போதம் முடிந்த நிலையில் 12-ம் சூத்திரத்திற் கூறுகின்றது. "சேலும் கயலும் திளைக்குங் கண்ணா ரிளங்கொங்கையிற் செங்குங்குமம், போலும் பொடியணி மார்பு" என்ற திருவிசைப்பாவும் பிறவும் கூறுமிவையாவும் நம்மளவில் ஏட்டுச் சுரைக்காய் என்ற மட்டிலே நின்று விடுகின்றனவே யன்றி ஒரு சிறிதும் கைவசமாக வரவில்லையே?

வழிபடும் இடங்கள் இந்நிலை யடைந்தன என்றால் வழிபடும் நெறிகளைப் பற்றிக் கேட்பானேன்? மக்கள் சைவத்திறத்தினடைதல் பல பிறவிகளிற் செய்த சிவபுண்ணிய மேலீட்டினால் கிடைக்கத் தக்கதாம்; அதை அடைந்தபின் சரியை முதலிய நான்கு நெறிகளினின்று சிவனடியைச் சேர்தல் கைகூடும் என்று ஞான சாத்திரம் முறையிடு

கின்றது. "புறச்சமய நெறிநின்றும்" என்ற சிவஞான சித்தியார் காண்க. இவற்றில் சரியையே முதற்படியாம். அதிலேயும் நமக்குக் கருத்து ஊன்றவில்லை யென்றால் அதன் மேற்படிகளில் ஏறுவதெப்படி? "சரியை கிரியா யோகம் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" என்பது பிரமாணம். காலங்களிற் கோயிலுக்குப் போவதும், அங்குத் திருஅலகு திருமெழுக்கிடுதலும், திருவிளக்குத் திருமாலைப்பணிகள் புரிதலும் நமக்கு விருப்பந்தரக் கூடாதனவாயின. இவற்றில் விருப்பமில்லாதது மட்டுமா? இவற்றைத் தாழ்ந்த தரமுடையன என்று வெறுக்காம லிருந்தாற் போதுமே! அவற்றைக் கீழான செயல்கள் என்றல்லவோ கொண்டிருக்கின்றோம்? நம்மில் பலரும் தாமே விதிப்படி பூக்கள் தேடிப் பறித்துச் சுவாமிக்குத் தருவதில்லையே. பழையதும் புழுவரித்ததும் உலர்ந்ததும் அநுசிதமானவையுமாயினும் காலணவுக்கு விலைக்குவாங்கிக் கொடுத்து அருச்சித்து மகிழ்ந்து அமைந்து கொள்ள நமது மனதைப் பழக்கிக் கொண்டோ மல்லவா? நமது நிலையிப்படி என்றால் இந்தக் கோயில்களின் அதிகாரிகளும் மேலதிகாரிகளும் உள்ள நிலை மிக இரங்கத்தக்கதா யிருக்கிறது. கடவுள் ஞானமும், பயமும், பத்தியும் ஆர்வமும் ஒரு சிறிதும் இல்லாதவர்களே பெரும்பாலும் இத்தானங்களில் அமைகின்றார்கள். உலகில் மற்றெல்லா நிலைகளுக்கும் உத்தியோகங்களுக்கும் ஒவ்வோர் யோக்கியதாம்சம் வேண்டப்படுகிறது. மருத்துவன் மருத்துவ நூல்கற்றுப் பழகி யிருக்க வேண்டும். கற்றுப் பழகிக் கைதேர்ந்த வழக்கறிஞர்களையே வழக்கர்கள் நாடுகின்றார்கள். தொழில் ஞானம் கற்றுப் பழகாத வேலைக்காரனை ஒருவரும் தேடார். நீதிக்கலை பயிலாதவன் நீதிமன்றத் தலைவனாக முடியாது. ஆனால் உயிரைப்பற்றிய ஞான நிலயமாகிய ஆலயத்திலும் மடங்களிலும் அந்த வகையறிவு சிறிதுமில்லாதவர்களே பணியாளர்களும் கீழ்முதல் மேல்வரை அதிகாரிகளுமாவார்கள்.

இது என்ன கொடுமை! இதற்கு ஓர் அறிவொழுக்க யோக்கியதாம்சம் வேண்டாமா? மேலும் போதாதற்கு, இனி அரசாங்கத்தார் நமது ஆலயங்களை யெல்லாம் ஒவ்வொன்றாக (நோட்டிபிகேஷன் ஸ்கீம் என்ற) பிரசுரம் செய்து தாங்களே (எக்ஸிகூடிவ் ஆபீஸர் என்ற) செயலாளர்களை நியமித்துப்பார்வையிடத் தீவிரமாய் முன்வந்துள்ளார்கள். ஆனால் அவர்களது நோக்கமும் நிர்வாகமும் கோயில்களின் ரூபா அணு முதலிய உலகநிலைச் சடப்பொருள்களை மட்டும் பற்றி நின்றுவிடுகின்றனவேயன்றி அந்த ஆலயங்களைப்பற்றிய ஞானம் அல்லது அறிவு, அன்பு முதலிய சித்துப்பொருள்களைப்பற்றி ஒரு சிறிதும் செல்கின்றதில்லையென்று காண மனம் மிக வருந்துகின்றது. உயிர் பிழைக்குமிடங்களாகிய கோயில்கள் உடற் பிழைப்பிடங்களாக மாறிவிட்டன.

இனிப் பொதுமக்களிடையே சமய உணர்ச்சியும் ஆர்வமும் மிகக் குறைந்து மரத்துப்போயிருக்கிறது. உதாரணமாக ஒன்று சொல்வேன். பரிசுத்தமாகியனவும் நினைத்தாலே நற்கதி தரக்கூடியனவுமான நம்முடைய தலங்களின் பெயர்களை இரயில்வே அதிகாரிகள் மலங்கழிக்குமிடங்களின் விளம்பரப்படுத்தினாலும், பிழைபட எழுதிப்பிரசுரித்தாலும் மனம் பதைக்காமல் பார்த்துக்கொண்டிருக்கும் சாந்தத்தை நாம் அடைந்துள்ளோம் என்றால் சமயத்தீவிரம் நம்மனத்தில் எங்கே யிருக்கின்றது? திருவாரூர் திருவாலூராயிற்று. "வைத்தீசுவரன் கோயில்" என்ற பெயரைக் கக்கூசுச் சுவரில் பெரிய எழுத்தில் எழுதியதையும் தினம் பார்த்துக்கொண்டுதானிருக்கிறோம். விளம்பரம் எங்கே எழுதினாலென்ன? என்று சிலர் சொல்லலாம், ஆனால் இதற்குப் பதிலாக இந்த இடத்தில் "ஆங்கிலேய இந்தியச் சிற்றுண்டிகள் கிடைக்குமிடம்" என்ற விளம்பரத்தை எழுதினால் யாராவது சம்மதிப்பார்களா? நம் சமயநிலை தூக்கத்திலிருந்து விழித்தெழுதல் வேண்டும்.

சமய உணர்ச்சிக் குறைவு

அன்பர்களே ! முடிபாக நான் சொல்லவேண்டியவை சிலவே. உண்மைச் சமய அறிவும் கல்வியும் நம்மிற் பரவுதல் வேண்டும். நமக்குட் சமய ஒழுக்கமும், சமய ஆர்வமும் வேரூன்றிவளர் தல் வேண்டும். சைவநூல்கள் - சித்தாந்த சாத்திர உண்மைகள் - சமயாசாரிய சந்தா ஞசாரியர்களின் வரலாறுகள் - சைவபுராணசரிதங்கள் - தலவிசேடங்கள் முதலியவற்றைச் சிறுபுத்தகங்களாகவும் - துண்டுப் பத்திரங்களாகவும்-சிறுபத்திரிகைகளாகவும் எல்லா ரிடமும் பரவச் செய்தல் வேண்டும். சித்தாந்தசைவர் வீடு கள் தோறும் சைவத்தெய்வப்பன்னிரு திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் வைத்து நாடோறும் வழிபட்டுப் பயிலப் பெறுதல் வேண்டும். ஆலயங்கள் தோறும் குரு மடங்கள் தோறும் சைவ சமயப் பிரசாரம் நாடோறும் அல்லது வாரந்தோறும் செய்யப் பெறுதல்வேண்டும். சித் தாந்த சைவர் ஒவ்வொருவரும் நாள்தோறும் சிவன்கோயில்- முருகன் கோயில் - விநாயகர் கோயில் எவற்றிலேனும் சென்று சிறிதுநேரமாவது விதிப்படி வழிபட்டொழுகுதல் வேண்டும். திருநீறுங் கண்டிகையும் சைவர்யாவரும் அணி தல் வேண்டும். திருமுறைகளில் ஒருபாசுர மேனும் தின மும் ஓதுதல் வேண்டும். நாடெங்கும் உள்ள எல்லா ஆல யங்களும் சைவசமயப் பிரசாரம் - சைவபுராண படனம் - சைவபாராயணம் - சைவக்கூட்டம் நடைபெறும் இடங்க ளாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். இவற்றிற்கு வேறி டங்கள் தேடியலைய வேண்டுவதில்லை. உலாவப்போதல் ஆடிடம் போதல் வாசகம் படிக்கப்போதல் என்றெல்லாம் உடற்சுகமும் மன அமைதியும் பெற எண்ணிப் பலவாறு சரித்தும் அவை பெறாது வாழ்நாளைப் போக்கும் நம்மக்கள், நமது நாட்டிலுள்ள எண்ணிறந்த திருக்கோயில்களை இவற் றிற்குப் பயன்படுத்திக் கொண்டார்களானால் உடற்பொலி வும் புண்ணியமும் சிவப்பேறும் ஒருங்கே பெறுவர். இது

நாம் செய்ய வேண்டிய வற்றுட்சில

ஆண்பெண்மக்கள் அனைவர்க்கும் ஒக்கும். இதுவே நமது முந்தையோர் கண்டமுறை. நமது கோயில்களை உயிர்ச்சுக மும் உடற்சுகமும் ஒருங்கேதரும் இடங்களாக ஆக்குவது நமது கடமை. சைவர் ஒவ்வோருவரது வாழ்க்கையில் ஒவ் வோருநாளிலும் ஒருசில விநாடிகளிலாயினும் சைவ எண் ணங்களுக்கும் சைவச் சோற்களுக்கும் சைவச் செயல் களுக்கும் இடமிருத்தல் வேண்டும்.

அன்பர்களே! அம்மையீர்! ஐயன்மீர், என் வர வேற்புப் பேச்சை இதனோடு நிறுத்திக் கொள்வேன்.

முடிபு

எங்கள் கொங்கு நாடு ஏனைய நாடுகளால் ஒருவாறு புறக்கணிக்கப்படும் நாடு. "துன்று மணிநீர்க் கான்யாறுந் துறுகற் சுரமும்" உடைய "சேயகொங்கர் நாடு" என்று நமது தெய்வச் சேக்கிழார் சுவாமிகளும் அருளியுள்ளார்கள். கொலையிலும் துன்பு றுத்துதலிலும் மிக்க நாடு என்று இக்காலத் தரசாங் கமும் கொண்டுள்ளது. ஆயினும் "கொங்கேபுகினும் கூறைகொண்டு ஆறலைப்பாரிலை" என்று தமது அனு பவத்திருவாக்கால் நமது ஆளுடைய நம்பிகள் அருளி யதை நம்பியே பற்பல நாடுகளினின்றும் அன்பர் கூட்ட மாகிய நீங்கள் எளியேங்களுடைய தாழ்மையான அழைப் பிற்கிணங்கிப் போந்துள்ளீர்கள். உங்கள் எல்லீர்க்கும் எங் கள் நன்றியுரியது. எங்கள் நாட்டிற்கு-எமது நகரத்திற்கு- நுங்கள் வரவு நல்வரவாகுக. இதுமுதல் மூன்று நாளும் எங்களது அன்பு கலந்த உபசரணைகளை யேற்று இனிதமர் ந்து சைவ சித்தாந்த சமாஜத்தின் முப்பத்து மூன்றுவது ஆண்டு விழாவைச் சிறப்பிக்க வரவேற்புக் கூட்டத்தாரின் சார்பாக நான் உங்கள் எல்லாரையும் வேண்டுவன்; எங்கள் உபசரணையில் எங்கள் அறியாமையாலும் மாட்டாமையாலும் பல குறைகள் நேரலாம். எங்கள் அன்பினையேகொண்டு அவற்றையெல்லாம் பொறுக்க வேண்டுவன். "வெறுப் பனவே செய்யும் என் சிறுமையை நின் பெருமையினுல் பொறுப்பவனே" எனவும், "பத்துடையீர் ஈசன் பழவடி யீர் பாங்குடையீர் புத்தடியோம் புன்மை தீர்த்தாட் கொண்

டாற் பொல்லாதோ " என்றும் அருளிய நமது பரமாசாரிய ரின் திருவாக்கினை நினைவுபடுத்திக்கொண்டு இம்மட்டோடு என் பேச்சை நிறுத்திக் கொள்கின்றேன்.

# தலைவர் வரவேற்பு வாழ்த்துப்பா

திருவளரும் செந்தமிழார் திரள்பொழிலின் சொற்புலமைத்
தருவளரும் சான்றோர்வாழ் தனித்தொண்டை நன்னாட்டில்,
உருவளரும் பசுந்தென்றல் உவந்தெழுந்து வீசிவரக்
கருவளரும் பொருட்கலம்சேர் கவின்திரைசார் கடலருகே
எருவளர வளர்ஈஞ்சங் கெதிரெதிரே நின்றோங்க
மருவளரும் கூவமெனும் வளநதியின் மருங்கினிலே,
தெருவளரும் ஒளியிலங்கத் திரண்மணைகள் செயலிலங்கப்
பெருவளமை நிலமோங்கும் பெருஞ்சென்னைநகருதித்தோய்!

ஒற்றிநகர்த் தியாகேசர் ஒளிகொளருள் வடபாலும்,
வெற்றிதருங் கபாலீசர் வீசுமருள் தென்பாலும்,
முற்றிவரு மவ்விடையின் முதுசைவந் தழைத்தோங்கப்
பெற்றுவரும் இராயரகப் பேட்டைதனிற் சிறந்தோங்கிச்
சுற்றிவரும் குலைத்தெங்கு சூழ்ந்திலங்கும் பொழில்சூழ
உற்றுவரும் மணிஇல்லத் துழைப்பிலருஞ் சபாபதிவேள்
நற்றவத்தி னுலகுய்ய நற்புதல்வ னெனவந்து
கற்றவரும் களிப்புறவே கவினுலகில் உதித்தோய்கேள்!

—தரவு

கல்வியெனும் பொருள்நலத்திற் கசிந்துருகா அஞ்ஞான்று
நல்வினைசெய் கல்வியைநீ நாடினதும் வியப்பலவோ!

பிறமொழியின் வலைப்பட்டோர் பிணங்கிநெகிழ் செந்தமிழை
அறமொழியாய் ஆய்ந்தநுநின் அமைதியினைச் சாற்றிலதோ!

மொழிகளிடைத் திறம்பெற்று மூலையிருந் துறையாமற்
பொழிபெயலிற் சொன்மாரி பொழிவதுவும் புகழலவோ!

ஆய்ந்ததுவும் அறிந்ததுவும் தனக்கெனவே யமையாது
பாய்ந்ததனைப் பலரையுமீ படிப்பித்தல் பயனலவோ !

அறிவிடத்து முதிர்ச்சியினை யழகுபெற அமைந்ததுடன்
நெறியிடத்துச் சமயநிலை நேர்ந்துழைத்தல் பெருமையதே ;

பலசமயத் திகல்பட்டுப் பரன்கருணை யயர்க்காமல்
நலசமயச் சைவத்தில் நாடியதும் அருங்குணமே ;

சைவமதி லாழ்ந்துசிவத் தனித்தொண்டு புரிவதுவும்
கைவலமாய்ச் சுவைபெற்றுக் கரைகாணல் அற்புதமே ;

தன்னினநற் சைவத்திற் றழைத்திடுதல் போதாதென்
றன்னியரு மதில்வாழ வருள்தேடல் அருமையதே !

—தாழிசை

அவனவ ளதுவெனு மவைகளி லுளனென
எவனெவ னறியவு மெழிலவை நிறுவுவை ;

உளதது மில்தது மொருவரோ டறிவகை
அளவறி வுறுவதி லமைவுறு மதியுளோ ;

இனமுறை எனவுரை இகலினை விடுமென
மனமுறை இடுமென மலிவுற நவிலுவை ;

வகைவகை அறிவினை வளமுற நிறுவிட
மிகவகை மருவிய மிளிரறி வொளிர்குவை ;

—அராகம்

பெண்மையின் பெருநலன் பேண லேசிறந்
தெண்ணுறத் தக்கதா மென்றல் போலயன்
கண்ணுறு கைத்தொழில் நீத்துக் கலைமகள்
எண்ணுறு கல்வியின் இனிது வாழ்குவை ;

—நாற்சீர் அம்போதரங்கம்

சைவ சமய சமாசமே
ஐவர் விறல்போல் வெற்றியுறக்
கைவைத் தெழுதக் கடமையினில்
உய்வர் உலகர் எனநினைவாய் ;

—முச்சீர் அம்போதரங்கம்

கல்வி புகட்டலே
செல்வ மாமெனச்
சொல் விடுத்துமே
நல்ல செய்வையே;
இமய வல்லியோ
டமலன் சார்பெருஞ்
சமயம் போற்றலே
நியம மென்றியே ;

—இருசீர் அம்போதரங்கம்

எனவாங்கு

—தனிச்சொல்

நினைநேர் குவரெவர் நேர்மைசால் தலைவர் ?
சுனைநேர் நற்றமிழ் சொரிபவர் யாருளர் ?
கொங்குநன் னாட்டரைக் குதூகலத் தாக்கிய
பொங்குநின் பெருமொழி பொழிந்ததை மறந்திலர் ;
மறுமுறை நின்றிரு மருமலர் வாயால்
நறுமண மாற்றம் நவின்றிடக் கேட்பான்
நாட்டம் உற்று நணுகினர் நின்பாற்
கேட்டலும் அன்பினிற் கிளந்தனை ஒப்பமும்
கொங்குநன் னாட்டினர் குலவிய நன்றியைத்
தங்கு தடையின்றித் தந்தன ராக
வருக கல்வியின் வளம்பெறு வள்ளால் !
வருக சைவ வளந்திகழ் அண்ணல் !
சச்சி தானந்தத் தக்கோய் !
இச்சையால் அழைத்தனம் இனிமையில் வருகவே !

—சுரிதகம்

இங்ஙனம் :

வரவேற்புக் கழகத்தினேம்.

திரு. C. M. இராமச்சந்திர செட்டியார் பாடியது

# இளைஞர் தலைவர் வரவேற்பு

சீரும் சிறப்பும் திகழப் பெறுகிற சேலமதில்
நீரும் நிலனும் நிரம்பிய காவிரி நீணதிப்பால்
ஆரும் அழகில் அணுகிய பொத்த னருநகரில்
சேரும் பெருங்குடி சென்மித் திடுமணி வாசகனே ! 1

தண்டமிழ் என்றால் தமரினர் கூடத் தடிஎடுப்பர்,
தொண்டமர் சைவம் துளியதும் காணிற் றுடைத்திடுவர்,
பண்டமர் கொள்கை படிக்கவும் வெட்கப் படுமிதுநாள்
வண்டமிழ்ச் சைவப் புலமைகொள் வாய்மணி வாசகனே ! 2

வெளிநாட் டிளைஞர் விளைவில் மதத்தின் விதைபெறுவர்,
ஒளிநா டுடைத்தமிழ் உன்னத மக்கள் உயர்சமயத்
துளிநா டினும்அதைத் தூற்றுவர், என்றிடில் நாத்திகத்து,
வளிநா டிடில்இவர் என்செய் குவர் ?மணி வாசகனே ! 3

நினைநிகர் ஆற்றல் நிலைத்திடு மக்கள் நிரம்பினராய்
அனைநிகர் சைவத் தமர்ந்திடல் அம்மா அருமையதே !
சுனைநிகர் ஊற்றம் சுரந்திடச் சைவச் சுடர்விளக்கே
மனைகள் தொறுந்தொறும் மல்குக நன்மணி வாசகனே ! 4

பெருகுக நின்குடி ! பேணிட ஓங்குக பின்னெதுவும் !
உருகுக நின்மனம் உண்மையில் ஏத்தும் உளத்தினர்பால் !
ஒருகுகன் ஈந்த உயர்தமிழ்ச் சைவம் உயர்த்திடுவோய் !
வருகுக எம்மூர் வளர்சபைக் கேமணி வாசகனே ! 5

இங்ஙனம் :
வரவேற்புக் கழகத்தினேம்.

திரு. C. M. இராமச்சந்திர செட்டியார் பாடியது

# இளைஞர் மகாநாட்டு வரவேற்புத் தலைவர்

## திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி, B. A. அவர்களின்

# முன்னுரை

சிவநேசச் செல்வர்களே, தங்கள் வரவு நல்வரவாகுக! எங்கள் பழமையான நாட்டில் நடைபெறும் இந்த இளமையான மகாநாட்டிற்குச் சைவ இளைஞர்களாகிய தங்களைப் பழமைபெறும் நட்புடன் அழைக்கின்றேன். சைவ அன்பில் ஈடுபட்டுள்ள தாங்கள் இந்நாட்டிற்கு அன்புகூர்ந்து எழுந்தருளிச் சமயத் தொண்டில் ஈடுபடுவீர்களாக!

எங்கள் நாடு மிகப் பண்டைய நாடு; புறநானூறு முதலிய சங்க நூல்களிலும், சிலப்பதிகாரம் முதலிய காவியங்களிலும், சைவ நூல்களாகிய தேவாரம் முதலிய திவ்விய பாடல்களிலும் பாராட்டப் பெற்றதொரு நாடாகும்; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உரோமானியர்களை வசீகரித்து அவர்களுக்கு மலைபடு பொருள்களைத் தந்து பொற்குவியலைப் பண்டமாற்றுகப் பெற்ற நாடு; சைவாசாரியர்கள் மூவராலும் புகழப்பெற்ற நாடு; பல புலவர் பெருமக்களை ஆதரித்த நாடு.' இத்துணைப் பெருமை வாய்ந்த இந்நாடோ தற்காலத்திற் பிறர் அறியாது, பல தடவைகளிலும் ஒதுக்கப்பட்டு வாளா நிற்கின்றது. அவ்வொதுக்கிடத்திலிருந்து முன் அணிக்கு வர இப்பொழுது முயற்சிக்கிறது. அம்முயற்சிக்கு ஆதரவு அளிக்கக்கூடியவர்கள் இளைஞர்களே. இந்நாட்டு இளைஞர்கள் இப்பொழுது இங்குக்கூடிய ஏனைய நாட்டு இளைஞர்களை வரவழைத்துத் தங்கள் பெரும் முயற்சிக்கு ஊக்கம் தருமாறு வேண்டுகின்றனர். அன்பு கூர்ந்து தாங்களும் அவ்வூக்கம் தருவீர்களாக!

இக்காலத்தில் இந்நாட்டில் சமய உணர்ச்சி குறைந்து நிற்கின்றது. அதிலும் இளைஞர்களுள் ஊக்கமே கிடையாது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. பிறநாட்டு மொழிகளையும் கலைகளையும் கற்பதனால் நம் நாட்டு மொழியும் சமயமும் நினைப்பார வாளா கிடக்கின்றன. பிறநாட்டுப் பழக்க வழக்கங்கள் இளைஞர்களை வசீகரிக்கவே, நம் நாட்டு வழக்கங்கள் மறைந்து மாயமாய்விடுகின்றன. இளமை முதற்கொண்டு சமயச் சார்பு இல்லாத படிப்பில் அடிபடவே, சமயத்தில் அன்பு குறைகின்றது. சில இளைஞர்கள் புற மதங்களால் வசீகரிக்கப்படத் தாய்மதம் மறந்துபடுகிறது. பள்ளிக்கூடங்களில் சமயவாசனை இல்லாமல்போகவே வீடுகளிலும் அது மாயமாகிறது. யாராவது ஒருவர் சமயப்பற்றுக் கொண்டால் அதுவே ஏசலுக்கும் ஒரு குறியாகி விடுகிறது. இவ்விதக் காரணங்களினால் சமயம் இருந்த நிலையில் இல்லாமல் மறைந்து விட்டது. சைவ சமயம் இந்நிலைக்கு வரவே இளைஞரில் நாத்திகமும் புறமதப் பிரவேசமும் நர்த்தன மாடுகின்றன. ஆகவே நாடும் நம் இளைஞர்களும் ஈன நிலைமை அடைவதற்கு வேறு காரணம் வேண்டாம்.

சமய உணர்ச்சி இருந்தால் அல்லவோ குண மேம்பாடு ஏற்படும்? குணமேம்பாட்டினால்தான் தன் மதிப்பும் தற்பண்பும் உண்டாகும். இளைஞருக்கு இக்குணங்கள் ஏற்பட்டால் அன்றி அவர்களுடைய இயக்கம் மேன்மை உறாது. வேறு நாடுகள் இளைஞர் இயக்கத்தால் மேம்படுவதைக் கண்டோமாயின், நம் நாட்டிலும் இளைஞர்களுக்குச் சமய உணர்ச்சி இல்லாவிடில் நாட்டு மேம்பாட்டிற்கு என்ன உதவி நம்மவர்கள் செய்யக் கூடும்? ஆகவே இளைஞர்களே! சமயத்தின் அடிப்படையான தத்துவங்களை அறிந்து அதன்படி ஒழுகுவீர்களாக! அப்போதுதான் நாட்டிற்கு ஊன்றுகோல்கள் ஆவீர்கள்.

இளைஞர்களால் செய்யக் கூடாத காரியம் ஒன்றுமில்லை. ஓய்வு நேரங்களில் சமயப்பிரசாரம் செய்யலாம். நாட்டுப் புறங்களில் கற்றறியாதவர்களுக்குச் சமய தத்துவங்களைக் கதைகள் மூலமாகக் கற்றுக் கொடுக்கலாம். சமூகத்தைச் சீர்திருத்தி எல்லா வகுப்பாரையும் உயர்வாக்கலாம். ஆலயச் சீர்கேடுகளைப் போக்கடித்து நல்ல வழியில் அவைகளை நடைபெறச் செய்யலாம். திக்கற்ற வகுப்பார்கள் கதிபெறக் கை கொடுக்கலாம். சமய போதனைகளை மக்கள் பெறுவதற்குச் சுலபமாக உதவலாம். சைவ நூல்களை அடக்க விலைப் பதிப்புகளாக வெளியிடலாம். ஏழை மக்களுக்கு இலவசமாக நன்னூல்களை அளிக்கலாம். இச்செயல்களுக் கெல்லாம் போதுமான பொருள் தேடவேண்டும். இவ்வியக்கத்தில் இளைஞர்கள்தான் பாடுபடக் கூடும். முதியவர்கள் பலபேர் செய்ய முடியாத கைங்கரியங்களைச் சில இளைஞர்கள் சிறிது காலத்தில் செய்து காட்டமுடியும். ஆகையால், உறக்கம் நீங்கி எழுந்திருங்கள்; பாடுபடுங்கள்; ஈசன் வெற்றி தருவார்; ஐயமில்லை! வெற்றி அடைவோம்!

நாட்டுப் புறங்களில் பெரும்பான்மையான பேர் கல்வி மணம் அறியாதவர்கள். சமய ஞானமே அவர்களுக்குச் சிறிதும் கிடையாது. அப்பேர்ப்பட்ட இடங்களுக்குச் சமய நூல்களைக் கொண்டு சேர்த்துச் சமய போதனையைச் செய்விக்க வேண்டும். இச்செயல்களும் இளைஞர்களாலேயே ஆகக்கூடியவைகள். ஆகையால் இக்கைங்கரியங்களில் ஈடுபட உடனே எழுந்து முன்னணிக்கு வருவீர்களாக!

இப்பெரு நாட்டிற்குத் தாங்கள் எல்லோரும் வந்ததற்காக என் முழுமனதோடு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். நாங்கள் செய்து வரும் வசதிகளில் ஏதாவது குறைபாடுகள் இருந்தபோதிலும் தயவு கூர்ந்து மன்னிப்பீர்களாக!

## சைவ இளைஞர் மகாநாட்டுத்

# தலைமையுரை

[சைவப்புலவர். போத்தனூர் - மணிவாசகனார்]

*வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க*
*பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத*
*சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்*
*பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.*

—சேக்கிழார்

சிவநெறிப் பெரியீர் !

அமரர் கோவாம் குமரன் தாதையின் அருட்டுணையால் கூடியுள்ளது இம்மாபெருங்கூட்டம். இஃது பத்தாவது சைவ இளைஞர் மகாநாடாகும். இம்மகாநாட்டிற்குத் தலைமை தாங்கத்தகுந்த அறிவும், ஒழுக்கமும், ஆற்றலும் வாய்ந்த இளைஞர் பலர் இருப்பவும், நற்பண்புகள் பலவுமிலா அடியேற்குத் தலைமைப் பதவி பூட்டுவித்த சமாஜத்தினரது பேரன்பை எம்மொழியால் மொழிவது? அன்னவர்க்கு எனது உளமார்ந்த நன்றியையும் அன்பையும் செலுத்துகிறேன். நீங்கள் அளித்த இத்திருத்தொண்டை "குற்றமே செய்யினும் குணமெனக் கருதும் கொள்கையாளனது" பழஅடியீராகிய உங்கள் அன்பின் துணையும் "எம்பிரான் சம்பந்தன்" இன்னருட்டுணையும் கொண்டு ஆற்ற முயல்கிறேன்.

### கோவை நகர்

இந்த மகாநாடு கூடியுள்ள மாநகர் அறிவியற் கழகங்களும், தொழிற்சாலைகளும் நிறைந்தது ; செல்வரும் அறிஞ

றும்சிறந்துவிளங்குவது;பட்டியெம்பெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளியதும், மேலைச் சிதம்பரமெனச் சிறந்ததும், நினைந்தவரது இன்னல் தீர்க்கும் ஊர்களில் பெரியதுமாகிய 'காஞ்சிவாய்ப் பேரூரை' யணித்தே உடையது. கொங்கின்கண் சிறந்த நகர்களுள் ஒன்றாயிலங்குவது.

## கோங்கு நாடு

கொங்கு நாடு என்றால் தேன்போலினிய நாடு என்றும், தெய்வமணம் கமழும் நாடு என்றும் பொருள் விரியும். இந்நாடு திணைவளத்திற் சிறந்தது; நமச்சிவாயப் பதிகம் பெற்ற திருப்பாண்டிக்கொடுமுடி, "அதிசயம் அநேகம் உற்ற பழமலை" முதலிய திருத்தலங்களையுடையது; முதலையொரு பிள்ளை தந்தது போன்ற அற்புதங்கள் பல நிகழப்பெற்றது. அதிகன், ஓரி முதலிய வள்ளல்கள் விளங்கிய நாடு; காலம் நோக்கும் குருமார்கள், அடிகண்மார், பாவலர், நாவலர், ஞானவீரர், கருமவீரர் முதலியோர் தோன்றுதற்கு நிலைக்களமாயுள்ளது.

## இளமையின் சிறப்பு

நாம் இளைஞர்; அதாவது இளமைப் பருவமுடையோர். இளமைப் பருவத்தை விரும்பாதாரில்லை. ஏன்? இளமையிலன்றோ இன்பம் பொலிகிறது? அழகு மிளிர்கிறது. இளமையைப் பாடாத பாவலரில்லை, பேசாத நாவலரில்லை. மனிதனைத் தெய்வநிலைக்குக் கொண்டு செல்லும் காதலும் சிறந்து விளங்குவது இளமையில் அல்லவா? கடவுளைக் காமுறவும் இளமை உள்ளம் அல்லவா வேண்டும்? இளமையிலேயே உடலும் உயிரும் வளத்திற் சிறந்து எண்ணியது எண்ணியாங்கு எய்துதற்கு ஏற்ற மனவலியும் சிறந்து விளங்குகிறது. செந்தமிழ்க் கடவுளும் என்றும் இளையோ

ளாய்த் திகழ்கின்றான். மகமது நபியும், புத்தரும் ஞானநிலை எய்தியதும் இளமையில் தானே? நமது சம்பந்தரும், சுந்தரரும், மணிவாசகரும், மெய்கண்டாரும் இளைஞர்கள் அல்லரா? இளமைக்குரிய மனம் குற்றமற்றதாய்த், தூயதாய்க், கலக்கமின்றி பளிங்கெனத் தெளிந்திருத்தல் வேண்டும். உடல் சிறப்புற வளர்ந்து வன்மையும், திண்மையும், உடைத்தாயிருத்தல் வேண்டும். ஒவ்வொரு இளைஞரும் மனத்தையும் உடலையும் ஓம்புதல் வேண்டும். மனம் மாசுற்றால் வாழ்வு குலையும். 'மனம்போல வாழ்வு', 'மன நலத்தான் ஆகும் மறுமை' என்னும் முதுமொழிகளை நோக்குக: உடலே, நாம் இன்பம்பெறத் துணைபுரியுங் கருவி; மனத்தின் இருக்கை; நடமாடுங்கோயில். உடல் கேடுறின் உயிர் கேடுறும், பிறவிப் பயனை எய்தமுடியாது.

இதனை,

> உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
> திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
> உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
> உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.

என்னும் திருமூலர் திருவாக்கு விளக்கும். அநுபூதிமான்கள் எந்நாளும் இளமையோடு விளங்குவார்கள். எம்போன்றார்க்கு இளமைப்பேறு சின்னாட்களே வாய்க்கும். சங்ககாலத்து மக்கள் நாற்பத்தெட்டு ஆண்டுகள் இளமை இன்பம் துய்த்தார்கள். "அறு நான் கிரட்டி இளமை நல்யாண்டு" என்று திருமுருகாற்றுப்படை கூறும். பின்னர் முப்பதாண்டு அநுபவித்தார்கள். இற்றைநாளில் முப்பதுக்குள் மூப்பு எய்துகின்றனர். இதன் காரணம் செயற்கை வாழ்வில் சிக்கியுழல்வதே. இளமையின்பம் நுகரவேண்டுமேல் இயற்கையோடு இயைந்த வாழ்வை மேற்கொளல் வேண்டும். இயற்கை வழிநிற்க ஆன்றோர் நூல்களைக்

கற்றல் வேண்டும். சிறப்பாக உயர்திரு. திரு. வி. கலியாண சுந்தர முதலியாரவர்கள் ஆக்கிய நூல்களைக்கற்று அதன் வழி நிற்றல் வேண்டும். அன்னார்க்கு இளைஞருலகம் ஆற்றப் போகும் கைம்மாறு யாதோ அறியேன். அன்னார் நீடுவாழ அறுமுகச் செவ்வேள் அருள் பாலிப்பானாக.

## சைவம்

நமது கூட்டம் சைவ இளைஞர் கூட்டம். சைவ இளைஞராவார் யார்? சைவநெறியில் ஒழுகுபவர். சைவநெறி சிவசம்பந்தமான வழி. சிவம் என்றால் இன்பம், தூய்மை, மங்கலம், நன்மை என்றுபொருள். 'மன்னு சிவன்' என்னும் சிவஞானபோத அருண்மொழிக்குப் 'பேரின்பத்துக்குக் காரணன்' என்று மாதவச் சிவஞான முனிவர் பொருளருளியுள்ளார்கள். பிறவிதாங்கிய ஒவ்வோருயிரும் இன்பம்பெற விரும்புகின்றது. இன்பம் தருபவன் இன்பகாரணன். இன்பகாரணனாகிய இறைவன் இயல்பாகவே கட்டினீங்கியவனாய் முற்றறிவுடையவனாய் விளங்குபவன். அவனைப் பற்றினால் உயிர்த்தொகுதி வினைக்கட்டினின்றும் விடுதலைபெற்று இன்பம் எய்தும். அவனை அடைவதற்கு உரிய வழியே இன்பநெறி, ஒளிநெறி, ஞானநெறி, சிவநெறி, சைவசமயம்.

சமயம் மக்களை விலங்கு நிலையினின்று தெய்வநிலைக்கு உயர்த்துவது. துன்பநிலையில் - கட்டுநிலையில் - உள்ள உயிர்க்குலம் இன்பம் - வீடு-பெறச் சமயம் இன்றியமையாதது. எப்பொருளினும் சிறந்தது உயிர். உயிரினும் சிறந்தது ஒழுக்கம். "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்" என்பர் திருவள்ளுவர். ஒழுக்கமே சைவ சமயத்தின் முதற்படி. சைவ சித்தாந்த சாத்திரம்

சைவ நிலைக்கு நல்லொழுக்கமும், தாழ்மனமும் வேண்டு மென்று போதிக்கிறது.

"ஒழுக்கம் அன்பு அருள் ஆசாரம் உபசாரம் உறவுசீலம்
வழுக்கிலாத் தவந்தா னங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவு அடக்கம் அறிவொடு அர்ச்சித்த லாதி
இழுக்கிலா அறங்கள் ஆனால் இரங்குவான் பணிய றங்கள்.

வாழ்வெனு மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெற லரிது சால உயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னானைப் போற்றுவா ரருள்பெற் றாரே"

(சிவஞானசித்தியார்)

சிவநெறி நீதிநெறி. சிவன் நீதிவடிவினன்; அற விடையை ஊர்பவன்; அறவோன். "நீதி பலவும் தன்ன உருவாமென மிகுத்த தவன்", "நீதியை நிறைவை", "நீதி யானை நியமநெறி ஓதியானை" என்பன அருள்வாக்கு. அவனை நீதி நெறியினின்று வணங்குதல் வேண்டும். "நீதி யால் அவனை நினைசெய்" என்பர் ஆன்றோர்.

நமது சமயக்கருத்தினைச் 'சைவ சித்தாந்தம்' என்று மேலோர் அழகுற மொழிவர். சித்தாந்தம் என்றால் முடிவில் சித்திப்பது என்பது பொருள். எதன் முடிவில் சித் திப்பது? "புறச் சமய நெறி நின்றும், அகச் சம யம் புக்கும், புகன் மிருதி வழியுழன்றும், புகலு மாச்சிரம அறத்துறைகள் அவையடைந்தும், அருந்தவங்கள் புரிந்தும், அருங்கலைகள் பல தெரிந்தும், ஆரணங்கள் படித்தும், சிறப் புடைய புராணங்கள் உணர்ந்தும், வேத சிரப்பொருளை மிகத் தெளிந்தும்" சென்றால் முடிவில் சித்திப்பது. ஆகவே, உலகில் தோன்றிய எல்லாவிதக் கருத்துக்களையும் பூர்வபட் சம் செய்து முடிந்த முடிபாய் விளங்குவது சைவ சித்தாந் தம். என்றும் உள்ள பொருள்கள் மூன்று. அவை பதி,

பசு, பாசம் என்பன. பதி அறிவுப்பொருள்; பாசம் அறியாமையைச் செய்வது; பசு இயல்பாகவே தன்னைப் பிணித்து அறியாமையைச் செய்கிற பாசத்திலிருந்து பதியின் திருவருட்டுணையால் விடுதலையடைந்து பேரின்பம் அடைகிறது. இதுவே சித்தாந்தத்தின் அடிப்படையானகொள்கை. இதனை விளக்குதற் கெழுந்தனவே சைவக் கலைகளாய சாத்திரங்களும் பிறவுமாம்.

சைவ சித்தாந்தம், மனத்திற்கும் எட்டாத காலத்தில் நாம் உய்யும்பொருட்டு நீத்தார் வாயிலாக சிவபெருமானாலேயே அருளப்பெற்றது. நமது முதற் குருநாதன் சிவபெருமானாதலால் அவன் உள்ள நாள்தொட்டுச் சைவ சித்தாந்தமும் உண்டு. பரசிவத்தாலேயே நமது சமயம் ஆக்கப்பட்டதால் எல்லாச் சமயங்களினுடைய கருத்தும் நமது சமயத்தில் உள்ளன. மற்றச் சமயங்கள் ஒவ்வொரு காலத்தில் அவனருள் விளக்கம்பெற்ற அறவோர்களால் மன்பதைகளுய்யும்பொருட்டு, அவனருளியுள்ள நெறியின்கண் விளங்கும் ஒவ்வொரு அமிசத்தையும் சிறப்புற விளக்குதற்கு எழுந்தனவாம். புத்தரும், மகாவீரரும் அருளுடைமையைப் பரப்பினார்கள். அருளிலார்க்குச் சைவத்தில் இடமேது? 'அருளே யுலகெலாம் ஆள்விப்பது' என்பது நமதுகொள்கை. ஏசுநாதர் அன்பைப் போதித்தார். "அன்பே சிவம்" என்பது நமது தாரகமந்திரம். மகம்மது நபி கடவுள் ஒருவன் என்று அறிவுறுத்தினார். "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்று நமது மறை முழங்கும். "எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்கு இங்கே என்று அருள் செய்வான்" சிவபெருமான் என்று ஆளுடையபிள்ளையார் அருளுவதும், "யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி ஆங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்" என்று அருணந்தி சிவனார் அருளுவதும் நோக்கற்பாலன. நமது

திருமந்திரமாகிய ஐந்தெழுத்தில் எவ்வெவர் கோட்படுபொருளும் அடங்குமல்லவா ?

நமது சமயம் பழைய நாளில் உலகெங்கும் அறக்கொடியாம் விடைக்கொடி வீசிப்பரந்து விளங்கியது. பிரிட்டனின் பழைய சமயம் சைவ சித்தாந்தம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இப்பொழுதும் பிரிட்டனை ஜான் புல் (இடபம்) (John Bull) என வழங்கும் கருத்தும் கருதத்தக்கது. வட நாட்டில் மொகஞ்சதாரோ, ஹாரப்பா முதலிய இடங்களில் நடைபெற்ற ஆராய்ச்சியின் துணைகொண்டு வடநாட்டிலும் சைவம் பரந்து விளங்கியது எனவும் கூறுகிறார்கள்.

## தமிழ் மொழி

தமிழ் சைவத்தோடு இரண்டறக் கலந்து விளங்கும் பெருமையுடையது. சைவமும் தமிழும் சொல்லால் வேறுபடினும் பொருளால் ஒன்றே. தமிழென்றாலும் இனிமையென்றே பொருளல்லவா ? சைவத்தின் முதற்படி சீரிய ஒழுக்கம். தமிழிலுள்ள நூல்கள் பெரும்பான்மையும் ஒழுக்கத்தையே வற்புறுத்துவன. இன்பகாரணன் இன்ப நெறியை வகுத்தற்கு ஏற்றமொழி இன்பமொழி யல்லவா ? இன்பமொழியே தமிழ்மொழி. தமிழிலேயே சைவசித்தாந்த சாத்திரங்களும், திருமுறைகளும் விளங்குகின்றன. தமிழ்ச்சுவைமாந்தச், சிவனும் முருகனும் சங்கப்புலவர்களாய் வீற்றிருந்ததையும், உமையாளோடு பாண்டி நாடாண்டதையும், அறியாதார் யார் ? சைவமணம் கமழாத சிறந்த தமிழ்க் கலையே இல்லையென்று கூறலாம். சைவத்தைப் பற்றி யறியத் தமிழ்க்கலை கற்றல் இன்றியமையாதது. இளைஞர்கள் எற்றுப்பயில வேண்டுவது தமிழே. தமிழ் கன்னித் தமிழல்லவா ?

## நமது கடமை

சைவ நண்பர்களே! இதுவரை இளமையைப் பற்றியும், சைவத்தைப்பற்றியும், தமிழைப் பற்றியும் சிறிது கூறினேன். நாளும் இத்தகைய வித்தகப் பேச்சு பேசுகிறோம். நமது தலைவர் "வித்தகம் பேசவேண்டாம் பணி செய்யவாரும்" என்று கட்டளையிடுகிறார். வாக்கின் மன்னர் "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்று மொழிகிறார். நமது கடமையை நாம் செய்தாலன்றி அவன் தனது கடமையைச் செய்யான். நாம் துன்புறுவோம்.

நாம் திருத்தமுற இறைவன் மனமொழி மெய்களைக் கொடுத்துள்ளான். பணிசெய்வோர்க்குத் திரிகரணங்களும் தூயவாயிருக்க வேண்டும். சிந்தையே மொழிக்கும், செயலுக்கும் மூலமாதலால் சிந்தை அழுக்காறு, அவா, வெகுளி வஞ்சம், பகை, காமம், எரி முதலிய மாசுகளின்றி விளங்குதல்வேண்டும். சொல் தூயதாய் இனிமையாயிருக்கவேண்டும். நற்செய்கை வேண்டும். திரிகரணங்களாலும் பணிபுரிதல் வேண்டும். அப்பர் திரிகரணங்களால் தொண்டியற்றினர்.

தொண்டு பல வகைப்படும். அவற்றுள் சிறந்தன மூன்று. அவை சமயப் பணி, மொழிப் பணி, நாட்டுப் பணி என்பவைகளாம். இவை மூன்றும் சிந்தை சொல் செயல் போன்றன. செயலுக்கும், சொல்லுக்கும் சிந்தையே முதலாவதுபோல நாட்டுப் பணி மொழிப் பணிகட்குச் சமயமே முதல். திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் செய்த சமயத் தொண்டின் பயனுலல்லவா மங்கிய சோழராஜ்யம் வீறுகொண்டு எழுந்து விளங்கியது? தமிழ் தழைத்தோங்கியது? அன்பர்களே! நாம் சைவக் கலைகளைக் கற்றல் வேண்டும். அதற்குத் தக நிற்றல் வேண்டும். உலகம் பிரசாரத்திற்கு அடிமை. ஆதலால் நாம் கற்றதையும் கேட்டதையும்

பிறர்க்கு எடுத்துக் கூறவேண்டும். நமது நாட்டவர்களில் பெரும்பான்மையோர் தாங்கள் இன்ன சமயத்தினர் என்பதையும், தங்கள் கடவுளின் திருப்பெயர் இன்னது என்பதையும், இறைவனின் இயல்புகளையும், சமய குரவர்களைப் பற்றியும் அறியாதிருக்கின்றனர். அவர்கள் உணருமாறு பிரசங்க வாயிலாகவும், பிரசுர வாயிலாகவும் பணி புரிதல் வேண்டும். சமய குரவர், சந்தான குரவர் ஆகியவர்களது வரலாறுகளைச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் எழுதி வெளியிடல் வேண்டும். சமய சின்னங்களைப்பற்றி விளக்குதல் வேண்டும். வெளிவராத சமய நூல்கள் எளிய விலையில் வெளிவருவதற்குத் துணை புரிதல் வேண்டும். எளிய விலையில் வெளிவந்துள்ள நூல்களை வாங்கியாவது ஆதரிக்க வேண்டும். தமிழும் பிறமொழியும் உணர்ந்தோர் சைவக் கருத்துக்களைப் பிறமொழியில், செய்தித் தாள்களின் வாயிலாகவேனும் வெளியிடல் வேண்டும். சைவப்பெரியார் திருவிழாக்களைக் கொண்டாடல்வேண்டும். அவர்கள் தோன்றிய, தரிசித்த, திருத்தலங்களைத் தரிசித்தல் வேண்டும். அவர்களது திருவுருவப் படங்களைச் சிறந்த முறையில் எழுதி எளிய விலைக்குத் தரல் வேண்டும். எத்துணைச் சைவர் இல்லங்களில் நால்வர் திருவுருவப் படங்கள் விளங்குகின்றன என்று கேட்கிறேன்? சமாஜத்தினரை முதன் முதலில் நால்வர் திருவுருவப்படம் ஒன்று சிறந்தமுறையில் வெளியிடுமாறு வேண்டுகிறேன். உங்களைச் சைவத் தேர்விற்கு நூல்களைப் பயின்று சிறக்குமாறு வேண்டுகிறேன்.

நமது சமாஜம் சமயத்தொண்டிற்கு என ஏற்பட்ட பெரிய ஸ்தாபனம். சமாஜம் சமயக் கருத்துக்களைப் பரப்புதற்குச் 'சித்தாந்தம்' என்று ஒரு திங்கள் வெளியீடு வெளியிடுகிறது. இதன் சந்தாதாரர்களே சமாஜத்தின் அங்கத்தினர்கள். இன்று சந்தாதாரர்கள் சுமார் முந்நூறு பேர்களே

உள்ளார்கள். சமாஜத்திற்கு அங்கத்தினர்கள் சேர்ப்பது சிறந்த சைவத்தொண்டாகும். இங்குள்ளவர்களில் அங்கத்தினர்களாகச் சேராதவர்கள் யாரேனும் இருந்தால் அவர்களை இப்பொழுதே அங்கத்தினராகுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

மறைத்திரு. சுவாமி. வேதாசலமவர்கள், கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், நெல்லையப்ப பிள்ளையவர்கள், நாட்டாரவர்கள், பண்டித மணியவர்கள், திரு. வி. க. அவர்கள், தமிழ் வேளவர்கள், சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள், C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள், C. M. இராமசந்திரஞ் செட்டியாரவர்கள், அடிகைக்கிழாரவர்கள், சரவண முதலியாரவர்கள், புரிசை முருகேச முதலியாரவர்கள், சுவாமி விபுலாநந்தரவர்கள், காஞ்சி வச்சிரவேல் முதலியாரவர்கள், ஔவை சு. துரைசாமிப் பிள்ளையவர்கள், நாமக்கல். வித்வான் உலகவூழியரவர்கள் போன்ற பெரியோர்களைச் சித்தாந்தத்திற்கு ஆண்டிற்கு ஒரு கட்டுரையேனும் தீட்டுமாறு மிக்க வணக்கத்துடன் வேண்டுவதோடு அமைவதல்லது வேறு என்செயவல்லேன். இத்தகைய பெரியோர்களெல்லாம் 'சித்தாந்தம்' பத்திரிகையில் தொண்டுசெய்ய முற்படுவார்களானால் சமாஜம் பல்லாயிரக்கணக்கான அங்கத்தினர்களைக்கொண்டு விளங்கும்.

நாம் நமது தாய்மொழிக்குப் பணிபுரிதல், நாட்டிற்குத் தொண்டாற்றுதல் முதலியவற்றில் சிறந்து விளங்கல் வேண்டும். எனது சிறுமொழிக்குப் பொறுமையோடு செவிசாய்த்த உங்கட்கு எனதுமனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்மைத் திருத்தொண்டர்களாக்குமாறு திருவருளைச் சிந்தித்து எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

# தலைமைப் பேருரை*

[திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை]

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாம் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறா மிணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்,

—திருவெம்பாவை

**சிவநேசச் செல்வர்களே !**

பெரியோர்களாகிய நீங்கள் அன்பின் பெருக்கால் சிறியேனை இத்தலைமையிடத்து அமர்த்தினீர்கள். தலைமை தாங்குதற்குரிய அறிவு ஆற்றல் முதலியன என்பாலில்லை யென்பதை யான் நன்குணர்வேன். தலைவர் செய்தற்குரிய கடமையோ மிகப் பெரிது. "அன்பர்பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே" என்ற திருமொழியில் முழு நம்பிக்கையுடைய நான் அன்பர்களாகிய நீங்கள் கொடுத்துள்ள இப்பணியைத் திருவருளின் துணைகொண்டு இயன்றவரை யாற்ற முயல்கின் றேன். "வெறுப்பனவே செய்யும் என் சிறுமையை நின் பெருமையினாற் பொறுப்பவனே" என்றார் வாதவூரடிகள். அஃதேபோல் "பொற்றவிசு நாய்க்கிடுமாறு" இங்கு எனை

---

* இது முன்னதாக எழுதப்பெற்று வழக்கம்போல் அச்சியற்றி வழங்கப்பெறவில்லை. இதன் சுருக்கமே காரியதரிசியாரால் வரையப் பட்டு ஈண்டு விரிக்கப்பட்டுள்ளது.

வைத்துள்ளீர்களாதலால் நான் அறிந்தும் அறியாமலும் செய்யும் குறைகளை உங்கள் பெருமையினால் பொறுத்தருள வேண்டுகிறேன்.

நூல்கள் பலவற்றைக் கற்றலால் நிரம்பிய அறிவையும், கேள்வியால் கற்றவற்றிலுள்ள பிழைகளைத் திருத்தும் நுண்ணறிவையும் பெற்று அநுபவ முதிர்ச்சியால் சமயநெறி நிற்போர் இக்காலத்தும் உள்ளார். அவர்கள் சமயநெறியில் நிற்க ஆசைப்படுவோரைவிட மிகவும் மேம்பட்டவர்கள். சமய நெறியில் நிற்க ஆசைப்படவேண்டும். அவ்வாறு ஆசைப்படுதலே எனது தகுதி. சமயநெறி நிற்போரை நோக்க, நிற்க ஆசைப்படுவோர் தளர்நடைச் சிறுகுழவியே போல்வர். நானும் அக்குழவியே போல்வன். நீங்கள் சில வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளித்தீர்கள். அவற்றுட் கூறியனயாவும் ஆர்வமிகுதியால் எழுதப்பட்டனவே. யான் அவற்றிற்குரியனல்லேன். எனது தந்தை ஊட்டிய சைவப்பற்று, அவர் பூசையில் திருவாசகம் ஓதக் கற்பித்தமை, இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜனசபையில் எனக்கேற்பட்ட தொடர்பு, சில ஞானாசிரியர்களின் அருட்பார்வை முதலியவைகளே என்னை இந்நிலைக்குக் கொணர்ந்தன. இவற்றை வந்திக்கிறேன். எல்லாச் சபைகட்கும் நாயகர் ஒருவரே. அவரே சபாநாயகர், சபாபதி என்று கூறப்படுவர். அவருடைய திருவருளே இங்கு மூன்று நாட்களும் விளக்கமாயிருக்கும். அவ்வருளே முன்னின்று எல்லாவற்றையும் இங்கு நடத்திவைக்கும். அவ்வருள் வழிநின்று குழந்தைகளாகிய நாம் நமது கடமைகளைச் செய்ய முயல்வோமாக. இம்மூன்று நாட்களிலும் புலவர் பலர் பேசுவர். "ஆயக்கடவேன் நானோதான்" என்ற திருவாசகத்தை நினைவுட் கொண்டு ஆய்ந்தாய்ந்து குற்றங் குறை கூறி நிற்றலை யொழித்துப்

புலவர்கள் கூறும் திருவருள் திறத்தின் பெற்றியினை யுணர்ந்து இன்புறுவோமாக.

கொங்கு நாட்டிற் சமாஜம் முதன் முறையாகக் கூடியுள்ளது. இந்நாடு பல தனிச்சிறப்புக்களை யுடையது. அவை வரவேற்புத் தலைவர் உரையிலும் இப்போது வெளியிடப்பட்டுள்ள கோவைத் தமிழ்ச்சங்கப் பிரசுரங்களிலும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. கொங்கு மண்டல சதகத்திலும் இந்நாட்டின் பழைய பெருமைகளைக் காணலாம். இந்நாட்டில் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் ஏழு விளங்குகின்றன. இத்தலங்களில் நிகழ்ந்த அற்புதங்களுள் இரண்டு மிகவும் வியக்கத்தக்கன. திருமுருகன் பூண்டியில் போன பொருளைத் திரும்பவும் வருவித்துக் கொடுத்த அற்புதம் நிகழ்ந்தது. அவிநாசியில் "கரைக்கால் முதலை பிள்ளைதரச் சொல்லு காலனையே" என்று போன உயிரை வருவித்து இறந்த பிள்ளையை மீண்டும் உயிர்ப்பித்துக் காலனை ஆண்மை கொண்ட பேரற்புதம் நிகழ்ந்தது. ஒரு நாடு என்பது யாது? அந்நாட்டிலுள்ள மண்ணும் கல்லும் விளை பொருளும் நாடாகுமா? ஆகா. ஈண்டு ஔவை மூதாட்டியார் கூறியதை நினைவூட்டுகின்றேன். "காடாகின்றே நாடாகின்றே, அவலாகின்றே மிசையாகின்றே, எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி, நல்லை நீ வாழிய நிலனே" என்பது முக்காலும் சத்தியம். இந்நாட்டிலும் பல தருமவீரரும் சத்தியவீரரும் திகழ்ந்தார்கள் என்பது சரித்திரத்தில் அறியக் கிடக்கின்றது. இந்நாட்டு மக்கள் உண்மை பேசி நேர்மையாக ஒழுகும் மேன்மையுடையவர்கள். தந்திரப் பேச்சும் இறைவனுக்கே குல்லாய் போட முயலும் வஞ்சனையும் இந்நாட்டிலில்லை.

இந்நாட்டின் பழைய பெருமைகளையே பேசி வீண் காலம் போக்கேன். முற்காலத்தில் போன பொருளையும்

போன உயிரையும் மீட்டுக் கொடுத்ததுபோலவே இக்காலத்திலும் போன பொருளையும் போன உயிரையும் மீட்டுக் கொடுத்த அற்புதம் நிகழ்ந்துள்ளது! நம்மெதிரிலுள்ள இரு நண்பர்களே இவ்வற்புதங்களை நிகழ்த்தியவர்கள். குன்றைமுனியின் திருவாக்குக்கு உரை செய்த கோவை முனி (திரு. C. K. சுப்பிரமணிய முதலியார்) ஒருவர்; கல் நின்ற மீண்ட சரிதைகளை உயிர்ப்பித்துக் கண்முன் கொணர்ந்த காத்தற் கடவுள் பெயர் கொண்டவர் (திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார்) மற்றொருவர். பெரிய புராணம் தோன்றி எழுநூறு வருடங்கட்கு மேலான போதிலும் அதற்கு உரைகள் ஒரு சிலவேயுள்ளன. பண்டைக்காலத் தான்றோர்கள் உரையெழுதினால் நூலி லுள்ளது இவ்வளவுதானோ என்ற பிழைபட்ட உணர்ச்சி வந்துவிடக் கூடுமென்றஞ்சியே சிறந்த நூல்களுக்குப் பொருள் கூறாது உரையெழுதாது விடுத்தனர்போலும். அதனால் அவ்வான்றோர்கள் காலங்கழிந்த போதே அவர்களறிந்த செம்பொருள்களும் நுட்பங்களும்போன பொருள்களாகிவிட்டன. போனபொருளை மீட்டுக்கொடுத்த பெருமை திரு. C.K. சுப்பிரமணிய முதலியாருடையதாகின்றது. திருவருளின் துணைகொண்டு காலஞ்சென்ற கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் போன்ற பல பெரியார்கள் கூறிய குறிப்புகளையெல்லாம் பாதுகாத்துச் சேமித்து ஒருங்குதிரட்டிக் கொடுக்கும் தொண்டு பெருந்தொண்டே யாகும். பலபாக்களுக்கு திரு. முதலியாரவர்கள் பதிப்பிலுள்ள உரைக்குறிப்பிலுள்ளவற்றைப் பயின்று நான் மட்டிலா மகிழ்ச்சியடைந்ததை மட்டிலா மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன்.

திருக்கோயில்களின் கற்சுவர்களிலும் தூண்களிலும் ஆயிரக்கணக்கான வரலாறுகள் எழுதப்பட்டுள்ளன. நாட்டு அரசர்களின் வரலாறுகள், பல போர்களின் வெற்றி தோல்வி

விவரங்கள், ஆலயங்கள் கட்டப்பட்ட புதுக்கப்பட்ட வரலாறுகள், விழாக்கள் பூசைகள் முதலியவற்றின் விவரங்கள், அன்பர்கள் அளித்த நன்கொடை விவரங்கள் முதலிய பற்பல செய்திகளைக் கல்லெழுத்துக்களிற் காணலாம். இவைகளைப் படிப்பாரின்றி, பாதுகாப்பாரின்றி, அறிந்து ஆய்ந்து விளக்குவாரின்றி இவை கல்லோடுகல்லாக இறந்தன போற்கிடந்தன. கல் நின்ற பொருள்களைக்காத்து அவைகளிலுள்ள உயிர்போன்ற உயரிய செய்திகள் இவையெனக் கண்முன் கவினுறக் கொணர்ந்தனர் காத்தறக்கடவுட் பெயருடைய திரு. இராமச்சந்திர செட்டியார். இவர்கள் தமிழுக்கும் சைவத்துக்கும் செய்துவரும் சிறந்த தொண்டினை அவ்வப்போது நான் பத்திரிகைகளிற்கண்டு மகிழ்வேன்; நீங்களும் மகிழ்ந்திருப்பீர்கள்.

நமது சமாஜம் முப்பத்து மூன்று ஆண்டுகளாகப் பணி செய்து வருகிறது. வரும் ஆண்டில் பன்மடங்கு அதிகமான பணியைச்செய்ய நாமனைவரும் ஊக்கம் கொள்ள வேண்டும். அவ்வூக்கத்தைக் கொங்குநாடு தருமென்று எனக்குள் ஏதோ ஒன்று சொல்கின்றது. நமது மகாநாடு லௌகீக மகாநாடுகள் போன்றதல்ல. அம்மகாநாடுகள் ஓரளவில் வேண்டியவைகளே. ஆனால் அவைகளை வைக்குமிடத்தே வைக்கவேண்டும். அவைகளைப்போல் நமது மகாநாட்டுக்குப் பல்லாயிரக்கணக்கானவர் வரவில்லையென்பது உண்மையே. அவ்வாறு வாராமையே நமது மகாநாட்டின் உயர்வைக் காட்டுகிறது. நான்யார், என் உள்ளமார், வந்தவாறெங்ஙனே, போமாறேதோ என்பன போன்ற கேள்விகளைக்கேட்டு ஆன்ம விசாரணை செய்வோர் ஆயிரத்தில் எத்தனைபேராவர்? அவருள்ளும் சித்தாந்தத்தேன் அருந்தினர் சிலரேயன்றோ? எனவே இவ்வெண்ணிக்கையின் சிறுமை சிறுமையைக் குறிக்காது பெருமையையே

குறிக்கும். நாம் சிலரேயாயினும் "சேரவாரும் செகத்தீரே" என்றழைக்கும் பெருமை நமக்கேயுரியது.

சிலர் இத்தகைய மகாநாடுகளால் என்ன பிரயோஜனமுண்டு என்கின்றனர். அவர்கட்கு நான் கூறுவது ஒன்றேயுளது. உரையுணர்வுகட் கெட்டாத கடவுள் இத்தகைய கூட்டங்களிற் சிறந்த சாந்நித்தியத்துடன் விளங்குகிறார். இயேசு கிறிஸ்து நாதரும் "இருவர் மூவர்கூடுமிடங்களில் நானுள்ளேன்" என்று கூறியதை நோக்குக. "மனத்தகத்தான்.......வாக்கினுள்ளான்....வாயாரப் பாடும் தொண்டரினத்தகத்தான்..." என்று அப்பர் மூர்த்திகள் கூறியதையும் உன்னிப்பார்க்க. இத்தகைய கூட்டங்களில் உட்கார்ந்திருந்தாலும் போதும்; சிறந்த உணர்ச்சி உண்டாகும். "சாந்தமுலேக சௌக்கியமுலேது" என்றார் கீர்த்தனாசாரியரான தியாகராஜர். இக் கூட்டம் சாந்தம் சௌக்கியம் நல்லாரிணக்கம் முதலியவற்றைக் கொடுக்கும். பல மெய்யடியார்களை ஒருங்கே காணும் போது உலகப் பற்று தளர்கின்றது. சமயநெறியிற் செல்வது சறுக்கு மரம் ஏறுவது போன்றது. திடமான முயற்சிவேண்டும். ஏறும் போது பலர் காலையிழுப்பார்கள்; கண்ணில் தண்ணீரை வாரியடிப்பார்கள்; சுற்றமென்னும் தொல்பசுக்குழாங்கள் தொந்தரை செய்யும்; நாட்டாரும் நகை செய்வர். இவற்றையெல்லாம் கடந்து ஏறிச் சென்றால் பேரின்பமாகிய உலவாக்கிழியைப் பெறலாம். இவ்விருபதாம் நூற்றாண்டில் மக்களின் வாழ்வு நிலை துன்பமே எந்நாளும் இன்பமில்லை என்பதேயாகும். அதிகப்பணக்காரனுக்கு அதிகமான துன்பம் சுமைபோலிருக்கிறது. இத்தகைய துன்பத்தை யொதுக்கி இன்பத்தின் தோற்றுவாய் காண்பதே இக்கூட்டத்தின் பயன். சிவபெருமானுடைய அறக்கருணை இங்கே தோன்றும் என்பதில் ஐயமில்லை.

இக்காலத்தில் நாகரிகம் முதிர்ந்த நாடுகளில் முதற் கண் கேட்கப்படும் கேள்வி சமயம் ஒன்று வேண்டுமா என்பதே. வேண்டுமென்று உண்மையாகக் கூறுவர் ஒரு சிலர். வேண்டுமென்று உதட்டளவிற் கூறுவர் சிலர். சமயத்தின் பேரால் நிகழும் தீங்கு பெரிது, சமயம் ஒழிக என்பார் பலர். "Religion is an opiate to the people" என்பர் Karl Marx (சமயம் மக்களறிவை மயக்கும் லாகிரி வஸ்து). ரஷ்யாதேசத்தில் சமயம் வேரோடு பிடுங்கியெறியப்பட்டுளது. ஆனல் சிறந்த அறிவாளிகளெல்லாம் மக்கள் வாழ்வின் மேம்பாட்டிற்கும் அறவுணர்ச்சி நிலைத்தற்கும் சமயம் இன்றியமையாதது என்றே கூறுகின்றனர். தாம்பரத்தில் இரண்டுவாரமாக நடைபெறும் உலக சமயக்கணக்கர் பேரவையும் இம்முடிபையே வலியுறுத்துகின்றது. சென்ற ஆண்டிலே சென்னையிற் கூடிய யூகரிஸ்டிக் காங்கிரஸும் அவ்வப்போது நடைபெறும் இஸ்லாம் மகாநாடுகளும் இதனை வற்புறுத்துகின்றன. சமயம்தேவை இறைவன் ஒருவன் உண்டு என்ற கொள்கையுடையவர்களெல்லாம் ஒரு கூட்டத்தவரேயாவர். ஏனையோர் புறம்பான தனிமக்களே யாவர். சமயம் வேண்டாம் என்போரும் சமயத்தின் பெயரால் நடைபெறும் கொடுமைகளைக் காணச்சகியாது அவ்வாறு கூறுபவரேயாவர். எனவே, அவர்கள் மீது பகை கொண்டு அவர்களை வெறுத்தலாகாது. அவர்கள் வெறுப்புக்குக் காரணமாயுள்ள பிழைகளைச் சோதித்துச் சீர்திருத்தம் செய்தலே அறிவுடைமையாகும்.

இங்ஙனம் வேண்டும் வேண்டாம் எனப்படும் சமயம் தான் யாது? உள்ள பொருள்களின் தன்மைகளையும் அவற்றின் தொடர்பையும் அறிவித்து அறிந்தவழி நிற்கச்செய்தலே சமயம் எனப்படும். உள்ளபொருள் (Reality) மூவகைப்படும். ஒன்று உலகம்; மற்றொன்று உயிர்; பிறிதொன்று கடவுள். இம்மூன்றும் ஒரு முக்கோணத்தின் மூன்று முனைகளில் உள்ளனபோல எண்ணிக்கொள்ளலாம். ஒவ்வொன்றும்

மற்றைய இரண்டோடும் தொடர்புடையது. உலகமாகிய பிரபஞ்சம் நாமரூப பேதங்களோடு தோன்றி நிலைத்துப் பின்னர் அழிவாகிய மாறுதலடையும் தன்மையுடையதேயாயினும் சூக்குமப் பொருளாக என்றும் உள்ளது. நாம் வாழும் அண்டம் மிகப் பெரியதாகக் காணப்படினும் வானிலுள்ள எண்ணிறந்த அண்டங்களை நோக்க இது மிகச் சிறியதே. Sir James Jeans என்ற வானநூற் புலவர் நமது பூமியை ஒரு சிறு மணலுக்கே ஒப்பிடுகிறார். பல்லாயிரம் சூரியர்கள், கோடிக்கணக்கான கோள்கள் முதலியன வானிலுள்ளன. இவை யனைத்தும் ஜடப் பொருள்களே. அவற்றிற்கு அறிவு அன்பு முதலியன இல்லை. இவற்றையாராய்ந்தறியும் அறிவுப் பொருள்களாகிய நாம் இருக்கிறோம். நாம் அனைவரும் சேர்ந்த தொகுதியே உயிர் எனப்படும். இத்தொகுதியுள் எல்லா வகையான ஜீவராசிகளும் அடங்கும். உலகத்தையும் உயிர்களையும் அவற்றின் தொடர்பையும் கூர்ந்து நோக்குவாருக்கு நமக்கு மேம்பட்டபொருள் ஒன்று உண்டென்ற முடிபு விரைவில் வருகிறது. நமது அறிவு சிற்றறிவு. பேரறிவு படைத்த பொருள் ஒன்று இருக்கிறதென்ற உணர்ச்சி இயல்பாகத் தோன்றுகிறது. அஃதேபோல் பேராற்றல், பேரருள், பேரின்பம் உடைய பொருள் உண்டென்றும் உணர்கிறோம். அப்பொருளை அறிந்து அதன்வழி நிற்றலே நலமென்று நமக்குத் தோன்றுகின்றது. இவ்வாறு நிற்றலை எவரும் எக்காலத்தும் வெறுத்ததில்லை; வெளி வேஷங்களும் போலிச் செயல்களும் பொய்யொழுக்கங்களுமே வெறுக்கப்பட்டன, என்றும் வெறுத்தற்குரியன. அறிவாளிகள் அவற்றை அன்றும் இன்றும் என்றும் வெறுப்பர்.

உலகம் உயிர் கடவுள் என்ற முப்பொருள்களுள் உலகம் உண்டென்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர். உயிர் உண்டென்பதையும் பெரும்பாலோர் ஒப்புக்கொள்கின்றனர். Descartes என்ற தத்துவஞானி "நான் விசாரிக்கிறேன் ஆகையால் நான் இருக்கிறேன்" என்று கூறிய வாதம் ஒப்புக்கொள்ளக் கூடியதே. கடவுள் ஒருவர் உண்டென்னும்

கால் வருகிற எதிர்ப்புக் களவே யில்லை. கடவுளைக் காட்டுக என்கின்றனர். நாம் தான் பாபம் கடவுளுக்கு வக்கீல்களாக இருந்து அவர் இருப்பதையே நிலைநாட்ட வேண்டி யிருக்கிறது. காட்டினுல் தொல்லையில்லை. ஆனுல் காட்ட முடியவில்லையே! ஏன்? அவரைக் காட்ட முடியாதே! ஏன்? புலனறிவுக்குட்பட்ட எல்லாப் பொருள்களும் இரண்டு தன்மைகளையுடையன. அவை ஜடத்தன்மை (அறிவிலாத் தன்மை), அழியுந் தன்மை என்பனவாம். அழியாத பொருளைக் கண்டேன் கேட்டேன் தொட்டேன் என்று இதுவரை ஒருவரும் சொல்லவில்லை. ஆகையால் காணப்படும், கேட்கப்படும்........ பொருள்களெல்லாம் அறிவில்லாப் பொருள்கள்; அழியும் பொருள்கள். கடவுளோ அழியாப் பொருள்; அறிவுடைய பொருள். ஆகையால் அவரைக் காண முடியாது. இது ஒன்றே அவருடைய குறையென்று வேடிக்கையாகக் கூறலாம். ஆனுல் சிலர் "என்ன, நீங்கள் அறிவுடைய பொருளாயிற்றே உங்களை நாங்கள் பார்க்கிறேமே, அதைப் போலக் கடவுள் ஒருவர் உண்டென்ருல் அக்கடவுளை ஏன் பார்க்க முடியாது?" என்று கேட்கின்றனர். இங்கே சிறிது கூர்ந்து கவனிக்க வேண்டும். நீங்கள் பார்ப்பது எனது தலைப்பாகை சட்டை, மேல்வேட்டி, முகம், விபூதி சந்தனப் பொட்டு, வழுக்கைத்தலை முதலியவற்றை யல்லவா? என்னை நீங்கள் பார்க்கிறீர்களா? என் உடம்பையும் உடை முதலியவற்றையும் தானே பார்க்கிறீர்கள்? என்னை நானே அறியவில்லையே! நாம் ஒருவரையொருவர் பார்த்தல் எல்லாம் உடல்களைத்தானே! மனைவி பார்ப்பது கணவன் உயிரையா உடலையா? கணவன் பார்ப்பது மனைவியின் உடலழகையா உயிரழகையா? நம்முள் உயிர் இருப்பதைக் கண்டறியாமல் ஊகித்தே அறிகிறேம். சிற்றுயிர்களாகிய நமது கதையே இவ்வாருயின், பேருயிர்-உயிர்க்குயிர் என்று போற்றப்படுகிற கடவுளை எவ்வாறு கண்டறிய முடியும்? கோட்டான் சூரியனைப் பார்க்க முடியுமா? பூனை பகலிற் பார்க்க முடியுமா? முடியாதல்லவா? நாமும் அவ்வாறே உள்ளோம். ஆனுல் ஞானக்கண்கொண்டு-உணர்வுக் கண்கொண்டு சிலர் பார்க்கின்றனர். பார்த்தவர்

கள் பார்த்த செய்தியைக் கூறியுள்ளனர். "புந்தி வட்டத்திடை புக்கு நின்றானையும் பொய்யென்பனோ?" என்றார் ஒரு பெரியார் (திருநாவுக்கரசு சுவாமிகள்). "ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்கு சோதிக்கவேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதியான்" என்றார் மற்றொருவர் (திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்)

ஒரு துறவியார் சாஸ்திரப் பிரமாணங் காட்டாமல் அநுமானத்தில் வைத்தே கடவுள் உண்மையைக் காட்டும் வழியைக் கீழ்வருமாறு குறித்துள்ளார். பிண்டத்தில் (உடம்பில்) எலும்பு முதலிய கடினபாகம் உள்ளது, அண்டத்திலும் கல், மண், இரும்பு போன்ற பிருதிவி பாகம் உள்ளது. பிண்டத்தில் இரத்தம் முதலிய நீர்ப்பகுதியுள்ளது அண்டத்திலும் அப்புபாகம் உள்ளது. இவ்வாறே இரண்டிலும் தேயு, வாயு, ஆகாய பாகங்கள் உள்ளன. பிண்டத்தில் சிற்றறிவு (நம்மில்) காணப்படுகிறது. இதற்காதாரமாக அண்டத்திலும் அறிவுப்பகுதி இருக்கவேண்டுமல்லவா? இஃதே போல் அன்பு, ஆற்றல், இன்பம் முதலியனவும் இருத்தல் வேண்டும். சிறிய அறிவு, ஆற்றல், இன்பம், அன்பு ஆகிய இவை ஒருங்கே நம்மிடத்தில் உள்ளன போலவே பேரறிவு, பேராற்றல், பேரின்பம், பேரன்பு முதலியன ஓரிடத்தே சேர்ந்திருத்தல் வேண்டும். அஃதே கடவுள் என்ற பொருள். நாம் நமக்குக் கிடைத்த அளவு அறிவு இன்பம் முதலியவைகளோடு திருப்தியடைவதில்லை. மேலும் மேலும் தேவையென்று எண்ணுகிறோம். இவ்வுணர்ச்சி (inner urge) பரிபூரண நிலைக்குச் செலுத்தி நமக்கு சாந்தியைத் தருகிறது. பணம், அதிகாரம் முதலியன பெற்றவர்கள் சாந்தியடைவதில்லை. 'இன்போர் அணுவாம் இடர் அதற்கோர் மாமலையாம்' என்ற நிலையே அவர்களுடையது. கடவுளிடத்திலேதான் சாந்தி பெறுதல் கூடும். "God is our home" என்பர் கிறிஸ்துநாதர்.

நாமெல்லோரும் கடவுளின் குழந்தைகள். கடவுள் நமக்குப் பொன் பொருள் போகம் முதலிய பொம்மைகளையும் விளையாட்டுப் பொருள்களையும் கொடுத்துள்ளார். விளையாடி

அலுத்த பிறகே நாம் அப்பா அம்மா என்று அழுது அவர்களை அடைவோம். அதுவரையில் பொம்மைச் சண்டைகளே வலுத்திருக்கும். ஆடி அலுத்தவர்கள் மேன்மேலும் பொம்மைகளைத் தரும்படி கேட்கமாட்டார்கள்: அப்படிக் கேட்போர் ஆடி அலுக்காதவர்களே.

நமது நண்பர்களும் உறவினரும் இறக்கின்றனர். நாம் நன்றாய்க் கவனித்திருந்தபோதிலும் நாமும் சாவோம் என்ற உணர்ச்சிமட்டும் நமக்கு வருவதில்லை. நம்மைப் பகற்குருடுகள் என்றல் பொருத்தமல்லவா? இது ஒரு மாயாவிசித்திரம். அறிவாளிகள் இதினின்றும் விடுபடல் வேண்டும். உடல் உள்ளபோதே பூரண அறிவு, ஆற்றல், அன்பு, இன்பம் ஆகிய இவற்றை அடையவேண்டும் என்ற உணர்ச்சி நமக்கு அழுத்தமாக ஏற்படவேண்டும். இம்மனித வாழ்க்கையை முற்றிலும் பயன்படுத்த வேண்டும். Parry கம்பெனியாருடைய ஆலைகளில் கரும்பு முற்றிலும் பயனுக்கப்படுவது போல் நாமும் செய்தல்வேண்டும். இதற்கு ஆங்கிலம் படிக்க வேண்டும், தமிழ் படிக்கவேண்டும் என்ற நிபந்தனைகளில்லை. எம். ஏ., பி. எச். டி., ஹிட்லர் நற்சாட்சிப் பத்திரம் முதலியனவெல்லாம் இதற்குப் பயன்படா. இதை அடையும் செவ்வையான வழியே சமயம். சமயம் என்பது நன்றாகச் செய்யப்பட்டது எனப் பொருள்படும்.

வழிகள் பலவாக உள்ளன. நேர்வழி, குறுக்குவழி, கிளைவழி, பெருவழி, சமவழி, காடுவழி என்றெல்லாம் பிரிக்கலாம். A class, B class முதலிய வழிகளைப் போலவே சமயவழிகளும் உள்ளன. நாம் போகவேண்டிய இடம் பேரூர். அதற்கு வழியாறு உள்ளன என்றார் ஒரு பெரியார். வழியைப் பழித்தலாகாது. பழிப்பவர் குன்று குரைத்தெழு நாயையொத்தவர். நமக்கென்று ஏற்பட்ட வழி நாலுபேர் போனவழி (சமயகுரவர் நால்வர் சென்ற வழி). இவ்வழிகளின் சமஷ்டியே பெருவழியாகிய சித்தாந்தம். இச்சித்தாந்த வீதி வரும் தேவே பராபரவஸ்து. இவ்வீதி கைலாய எஞ்சினீயர் போட்டவழி. இது சநாதனமானது, மிகத் தொன்மையது, என்றும் புதியது.

இவ்வழி வேதத்திலே கூறப்பட்டுள்ளது. சிலர் சிவலிங்க வழிபாடு இருக்கு வேதத்திற் கூறப்படவில்லை யென்கின்றனர். இது தவறு. "சிவலிங்கத்தை நாற்புறமும் ஸ்பரிசிக்கும் பேறு பெற்றமையால் என் கைகள் பாக்கியம் செய்தவை" என்று மொழிபெயர்த்தற்குரிய பகுதி ஒன்று இருக்கு வேதத்தில் உள்ளதாக ஒரு நண்பர் எனக்குக் கூறினார். ஸ்மிருதிகளிலும் இதிகாசங்களிலும் சிவ வழிபாடு கூறப்படுகிறது. பதினெண் புராணங்களுள் பத்து சைவ புராணங்களே. தலங்களுள் மிக முக்கியமான காசி இராமேசுவரம் என்பன இரண்டும் சிவஸ்தலங்களே. மோஹஞ்சோடாரோவிலும் கி. மு. 3000-க்கு முற்பட்ட காலத்தில் சிவலிங்கம், அம்பிகை, நந்தி முதலிய உருவங்களிருந்தனவாகத் தெரிகிறது. எனவே சைவரோட்டு தக்ஷிணாமூர்த்தி போட்ட மிகப்பழைய ரோட்டேயாகும். தாயுமானவர் கூறுவதுபோல சந்தான கற்பகம்போல் என்றும் உள்ளது. எல்லா ஆன்மாக்களையும் ஈர்த்து இணைத்துப் பிடித்துச் சேர்க்கும் பெரியவழி இதுவேயாகும்.

இவ்வழி சென்றால் அதிதீவிரமுயற்சி செய்து ஒரு பிறவியிலேயே நமது வேலையை முடித்து ஜீவன் முத்தர்களாகலாம். இவ்வுலகம் ஒரு பெரிய சத்திரம், நாமெல்லோரும் யாத்திரிகர்கள். சிலர் சத்திரத்திலேயே உண்டு உறங்காமல் முழு விழிப்பாக மேலே சென்று உலகயாத்திரையை முடிப்பர். சிலர் உறங்கியே வீண்காலங்கழிப்பர். அவர்களைச் சத்திரத்துக்குச் சொந்தக்காரன் துன்பமாகிய புளியம் வளாரால் மோதுவித்து எழுப்பி விழிக்கச்செய்வன்.

இவ்வழி இயற்கையோடொத்தது, அறிவாராய்ச்சிக்குப் பொருத்தமானது; அநுட்டானத்தில் கொணரக் கூடியது. உலகமில்லை, நீயில்லை, நானில்லை, சோறில்லை, இலையில்லை என்றெல்லாம் கூறப்படுகிற கொள்கைகள் இவ்வழியிலில்லை. நமது கொள்கைகள் (Dr. Johnson's Commonsense) என்ற பகுத்தறிவுக்குப் பொருத்தமானவைகளே. அதீத நிலையில் மேற்கூறிய "இல்லை"களெல்லாம் உண்மைகளாயிருக்கலாம். நமது வழி உலகத்தி

லுள்ளவைகளை உள்ளவாறே வைத்து மேல்நிலை செல்லும் நெறியைக்காட்டும். நமது வழி "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்றே கூறுகிறது. இவ்வாழ்வுக்குக் காரணம் பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகையாகிய இறைவன் திருவருள் பாலித்ததே. நம்மிலும் பெண் நல்லாளாகவும் ஆண் பெருந்தகையாகவும் இருத்தல் வேண்டும். இல்லாவிடில் மண்ணில் நல்ல வண்ணம் வாழ இயலாது. நமது சிவபெருமான் மங்கையோடிருந்தே யோகு செய்யும் பரமன். நமது சமய குரவராம் சுந்தரமூர்த்திகளும் பரவையோடிருந்தே பண்ணும் யோகபரம்பரையிற் பயின்றவர். நாமும் வீட்டைவிட்டுக் காட்டுக்கோடித் திரியாமலே யோகம் செய்யலாம்.

சிலர் இல்லறம் பெரிதா துறவறம் பெரியதா என்று கேட்கின்றனர். இக்கேள்விக்குத் திருவள்ளுவர் கூறிய விடையை ஞாபகப்படுத்துகிறேன். ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஓடம் மிதக்கும் உவமையைக் கூறினர். ஓடம் தண்ணீரில் மிதந்தால் தான் பயன்படும். கரையில் நிலமிசையிருந்தால் பயன்படாது. தண்ணீர் ஓடம் மிதப்பதற்கு மிக அவசியம். ஆனல் தண்ணீர் அவசியமென்று ஓடத்தைத் தண்ணீர்விட்டு நிரப்புதல் கூடாது. அவ்வாறு செய்யின் ஓடம் நம்மைத் தண்ணீரில் மூழ்குவித்துக் கொல்லும். ஓடமே உடம்பு, தண்ணீரே உலகம். ஓடம் தண்ணீரில் அழுந்தியிருப்பதுபோல் காணப்படினும் மிதந்தே நிற்பதுபோல நாமும் உலகத்தில் அழுந்திவிடாது பற்றின்றி மிதக்கவேண்டும். ஓடத்துக்குள் தண்ணீரை நிரப்புவதுபோல் நம்மை உலகத்து அடிமைப்படுத்திவிடக் கூடாது. ஓடத்தைக்கொண்டு அக்கரை செல்வதுபோல நாமும் இவ்வுடல்கொண்டே உலகத்தைக்கடந்து மோக்ஷக்கரையையடையவேண்டும். ஓடத்தின் அழகிலேயே ஈடுபட்டு அதை உலாப்படகாக (Pleasure Boat) உபயோகப்படுத்துதலும் கூடாது. அறுபத்து மூன்று நாயன்மாருள் பெரும்பான்மையோர் இல்லறத்திலிருந்தவர்களே. ஆனல் அவர்கள் ஓடத்தில் தண்ணீரை நிரப்பாதவர்கள். ஓடத்தால்

அக்கரை செல்லாது வானூர்தியால் (aeroplane) செல்வது போன்றது துறவறம். அனைவரும் வானூர்தியிற் செல்ல இயலாது. ஓடத்திற் தண்ணீர் நிரப்பாது அக்கரை செல்வதே பெரும்பான்மையோருக்கு இயலும் வழி.

சைவப் பெருவழியில் நின்று நமது தமிழ் நாட்டளவில் சாதனையாலும் போதனையாலும் நால்வர் சமயகுரவராக நமக்கு வழிகாட்டினார்கள். குறிகளும் அடையாளங்களும் கோயில்களும் விழாக்களும் நமக்கு நிரம்பவுள்ளன. இவற்றிற்கு வடமொழியிலும் தென்மொழியிலும் சிறந்த ஆதாரங்களுண்டு. இவ்வழியில் நிற்போர் உலக மதிப்பில் உயர்வில்லை யென்ற தப்பெண்ணம் நம்மிடை நிலவுகிறது. சேரன் செங்குட்டுவன், கரிகாற்பெருவளத்தான், ராஜராஜ சோழன் முதலிய உலகாண்ட மன்னர் மன்னர்கள் சைவர்களே. அவர்கள் சிறந்த வீரர்களாயிருந்த போதிலும் நிறைந்த அன்பினராய் வாழ்ந்தனர். "நாமார்க்குங் குடியல்லோம்" "அஞ்சுவதியா தொன்றுமில்லை" "கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்ற அஞ்சாநெஞ்சம் நமது சைவருக்கேயுரியது. மறவீரம்நீக்கி அறவீரம் கைக்கொண்டவர் நமது அப்பர் மூர்த்திகள். நமது தெய்வங்களும் அவ்வாறே அமைந்துள்ளன. விநாயகர் பெரியவயிறுபடைத்து ஒன்றுக்கும் உதவாத ஒருவரைப்போற் காணப்படினும் கயமுகனைச் சம்ஹாரிக்கும் ஆற்றலுடையவர். முருகவேளும் வள்ளிபதம் பணியும் அதிமோக தயாபரனாயினும் சூரபன்மனை வெல்லும் ஆற்றலுடையவர். அம்மையாரும் பெண்மை நிறைந்தவராயினும் மகிஷாசுரனைக் கொல்லும் தீரம் வாய்ந்தவர். நாமும் சைவர்களாக இருப்பதோடு சிறந்த அறவீரர்களாகவும் இருக்கலாம். கடமை செலுத்தும் வழி போர் நேர்ந்தால் போர்செய்க, வெற்றிபெறுக. சந்தனக்கட்டைக்குப் பதிலாகத் தம் கையைத் தேய்த்த வீரர் சைவரே. "எல்லாம் உன்னடிமையே எல்லாம் உன்னுடைமையே எல்லாம் உன்னுடைய செயலே" என்ற உணர்ச்சியோடு உலகில் வாழ்ந்து உலகை வெல்க.

நமது சமயநிலை மிகத்தளர்வுற்றிருக்கிற தென்று ஆங்காங்கு கூறப்படுகிறது. சமயங்கட்குத் தோல்வியும் வெற்றியும் காலபேதத்தினால் வருவது இயற்கை. "அமண் சாக்கியம் ஆக்கியவாறே" என்று கடவுளைக்குறித்துத் திருவாக்கெழுந்தது நமது நினைவிலிருக்கும். எல்லாச் சமயங்களும் ஒரே கடவுளால் ஆக்கப்பட்டிருத்தலால் ஒன்று வெற்றியும் மற்றொன்று தோல்வியும் அடைந்தால் நமக்கென்ன கவலையென்று சிலர் கேட்கின்றனர். ஒரு சமயம் நிலைதிரிந்து பிறரைத் துன்புறுத்த நேருங்கால் தற்பாது காப்புக்காக வேண்டி மற்றொரு சமயம் வேலை செய்தே தீர வேண்டும். எல்லாச் சமயங்களும் தத்தம் நிலைதிரியாது ஒருங்குவாழுதலே இறைவன் திருவுள்ளம். அத்திருவுள்ளத்தையறிந்தே நிலைதிரிந்த சமயத்தை வாதில் வென்றார் புகலிவேந்தர். நாமும் அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றி "ஞாலம் நின்புகழே வேண்டும்" என்ற கொள்கையோடு இறைவனை வணங்கி அவனுடைய திருவருளின் கொள்கலன்களாகத் திகழவேண்டும்.

நேற்று மேட்டூர் அணையைப் பார்த்தேன். மழையின்றி வறண்டுள்ள நிலையிலும் ஐந்துகண்கள் வழியாகக் காவிரியாறு சுருண்டெழுந்தார்த்து ஓடுகிறது. காவிரி ஓடுவது திருவருட் பிரவாகத்தை நினைவூட்டுகிறது. நான் என்ற அணைபோடாது விட்டால் நம்மூலம் அருள்பாயும். உலகப் போர் தனிமகன் போர் (World problem is individual problem) என்று ஜே. கிருஷ்ணமூர்த்தி கூறுகிறார். ஆதியும் அந்தமு மில்லாத பொருளோடு நம்மை லயப்படுத்திக் கொள்ள வேண்டும். (In tune with the Infinite) அவ்வாறு செய்தற்குப் பல படிகளும் அநுட்டான முறைகளும் ஏற்பட்டுள்ளன. அவ்வழி நின்றால் நாமும் படகில் தண்ணீரை நிரப்பாது கரையேறிப் பேரின்பம் எய்தலாம். உலகிலும் வான்முகில் வழாது பெய்தல் முதலிய மங்கலங்கள் என்றும் நிலைபெற்றிருக்கும். இது காறும் பொறுமையோடு கேட்டிருந்த உங்கட்கு நன்றி செலுத்துகின்றேன்.

## சைவசித்தாந்த மகா சமாஜத்தின்

# 33-வது ஆண்டு அறிக்கை

இச்சமாஜம் 1905ஞ ஜூலைமீ 7உ திருப்பாதிரிப்புலியூரில் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் மடாலயத்தில் நிறுவப்பெற்று 1915ஞ டிசம்பர்மீ 11உ சபைப் பதிவுச் சட்டப்படிப் பதிவு செய்யப்பட்டது. இச்சமாஜத்தின் நோக்கம் சைவசித்தாந்த சமயத்தைப் பரவச் செய்தலேயாம். இந்நோக்கம் முற்றுப்பெறுதற்குப் பலமுறைகள் கையாளப்பட்டுவருகின்றன. அவற்றுட் சில, கூட்டங்களை நடத்துதல், நூல்களை வெளியிடுதல், பத்திரிகையை அனுப்புதல் முதலியனவாகும். சமாஜத்தின் பொருள்நிலை, தொண்டர்களின் ஊக்கம், பொதுமக்களின் ஆர்வம் முதலியவைகளுக்கேற்பத் தொண்டு நடந்து வருகிறது.

இச்சமாஜ உறுப்பினர் தொகை இவ்வாண்டின் தொடக்கத்தில் 346 ஆகவும், இறுதியில் 342 ஆகவும் உள்ளது. உறுப்பினர் தொகையை அதிகரிக்கச் செய்வது தொண்டர்கள் முதற்கடமையாகும். சென்ற இரண்டாண்டுகளில் மாதந்தோறும் ஒரு கூட்டமாக வெளியூர்களில் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றமுறை இவ்வாண்டில் வெளியூர் அன்பர்கள் ஊக்கக் குறைவால் கைவிடப்பட்டது. வடலூரிலும் திருவொற்றியூரிலுமே இக்கூட்டங்கள் தை மாசி மாதங்களில் நடைபெற்றன. அடுத்த ஆண்டிலேனும் அன்பர்கள் ஊக்கங்கொண்டு பல வெளியூர்களில் சமாஜக் கூட்டங்களை நடத்தி உபகரிப்பார்களென்று சமாஜம் எதிர்பார்க்கின்றது.

சென்ற மூன்றாண்டுகளாக நடைபெற்று வந்த சாத்திர வகுப்பும் இவ்வாண்டில் கேட்போர் இன்மையால் நின்றுவிட்டது. சைவப் புலவர் தேர்வுக்கு அறுவரும் இளஞ்சைவப் புலவர் தேர்வுக்கு அறுவரும் இவ்வாண்டில் விண்ணப்பித்தனர். இவர்களுள் பதினொருவர் ஈழநாட்டினர்; ஒருவரே சென்னை மாகாணத்தினர். இப்பன்னிருவருள் ஐவரே பரீ

க்ஷைக்கு வந்து விடை எழுதினர். இவருள் நால்வர் தேறினர். இப்பரீக்ஷைகளை நடத்திக்கொடுத்த திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியாரவர்கட்கும், திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கட்கும் சமாஜம் நன்றி செலுத்துகின்றது. இத்தேர்வுகட்கு நூற்றுக்கணக்கான சைவ இளைஞர்கள் விண்ணப்பித்துப் பட்டங்களைப் பெறுவார்களென்று சமாஜம் எதிர்பார்க்கின்றது.

இவ்வாண்டில் பெரியபுராணம் இரண்டாம் பதிப்பாகவும், சிவகுமாரர்கள் தேவாரம் இரண்டாம் பதிப்பாகவும், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் வியாசமொன்று முதற் பதிப்பாகவும் வெளிவந்துள்ளன. திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் எழுதிய திருவாசக உரை செலவாகிவிட்டபடியால் திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் எழுதிய குறிப்புரையோடு திருவாசகப் பதிப்பு ஒன்று இவ்வாண்டு நிறைவிழாவின் தொடக்கத் திருப்பணியாக வெளிவருகின்றது. இவ்வெளியீடுகட்குத் துணை புரிந்த பெரியார்கட்குச் சமாஜம் நன்றி செலுத்துகின்றது.

சமாஜத்துக்குப் பல வழிகளில் தொண்டு புரிந்துவரும் சமாஜ உத்தியோகஸ்தர்கட்கும் சைவ சீலர்கட்கும் சமாஜம் மனப்பூர்வமான நன்றி செலுத்துகின்றது. "சித்தாந்தம்" பத்திரிகையை உயரிய முறையில் நடத்தப் பேரறிஞர்களும் பெருஞ் செல்வர்களும் முன்வருவார்களென்று சமாஜம் எதிர்பார்க்கின்றது. சென்ற ஆண்டில் நிறைவேறிய தீர்மானங்களை வருகிற ஆண்டிலேனும் நடைமுறையிற் கொண்டு வருமாறு சமாஜத் தொண்டர்களை மிகப் பணிவாக வேண்டிக் கொள்ளுகிறது. உலகெங்கும் திருவருள் நெறி ஒளிவீசி மன்னுயிர்களை இன்பத்திருத்துவதாக.

இங்ஙனம்
உத்தரவின்படி
ம. பாலசுப்பிரமணியன்
காரியதரிசி

சைவசித்தாந்த மகா சமாஜத்தின் முப்பத்துமூன்றும் ஆண்டு
1-12-1937 முதல் 30-11-1938 வரை

## வரவு செலவு கணக்குத் தொகுப்பேடு

**வரவு**

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| சந்தா | 546 | 0 | 0 |
| இணைத்தல் சந்தா | 21 | 0 | 0 |
| வெளியீடுகள் | 652 | 3 | 3 |
| நன்கொடை | 6 | 0 | 0 |
| தபால் வகை | 25 | 8 | 0 |
| வட்டி வகை | 22 | 1 | 5 |
| பரீக்ஷைக் கட்டணம் | 18 | 0 | 0 |
| இந்தியன் பாங்கி | 472 | 0 | 0 |
| வே. ஐ. கா. பாங்கி | 0 | 4 | 0 |
| | 1763 | 0 | 8 |
| ஆரம்ப இருப்பு | 1 | 6 | 1 |
| | 1764 | 6 | 9 |
| பொருள் வலிவு | | | |
| இந்தியன் பாங்கி | 500 | 7 | 9 |
| கையிருப்பு | 5 | 13 | 2 |
| | 506 | 4 | 11 |

**செலவு**

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| வெளியீடுகள் | 1096 | 0 | 0 |
| சித்தாந்தம் | 456 | 9 | 2 |
| தபால் வகை | 126 | 14 | 0 |
| சில்லரை வகை | 7 | 1 | 0 |
| இந்தியன் பாங்கி | 72 | 1 | 5 |
| | 1758 | 9 | 7 |
| முடிவு இருப்பு | 5 | 13 | 2 |
| | 1764 | 6 | 9 |

ம. பாலசுப்பிரமணியன், காரியதரிசி.

தி. க. சுந்தரம் பிள்ளை, பொருட்காப்பாளர்.

க. இரத்தின முதலியார், மாதக் கணித பரிசோதகர்.

ஈ. ந. தணிகாசல முதலியார், ஆண்டுக் கணித பரிசோதகர்.

# சமாஜ உத்தியோகஸ்தர்கள்

[கோயன்புத்தூரில் நடைபெற்ற 33-ம் ஆண்டு நிறைவிழாவில் 30-12-1938ல் நடந்த தேர்தலின் முடிபு. ஒவ்வொரு பெயர்முன் "சைவத் திருவாளர்" என்றும் பின் "அவர்கள்" என்றும் சேர்த்து வாசிக்கவும்.]

**தலைவர்**

ச. சச்சிதாநந்தம் பிள்ளை

**உதவித் தலைவர்கள்**

திவான்பகதூர் கீ. தெய்வசிகாமணி முதலியார்
அ. சோமசுந்தரம் செட்டியார்

**பொதுக் காரியதரிசி**

ம. பாலசுப்பிரமணிய முதலியார்

**உதவிக் காரியதரிசி**

ஜி. கலியாணம் பிள்ளை

**பொருட்காப்பாளர்**

தி. க. சுந்தரம் பிள்ளை

**பத்திராசிரியர்**

திரு. வி. உலகநாத முதலியார்

**உதவிப் பத்திராசிரியர்**

மா. துரைசாமி முதலியார்

**ஏனைய நிர்வாக சபையினர்**

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்
தி. நல்லசிவன் பிள்ளை
எஸ். வையாபுரிப் பிள்ளை
பி. ஆலாலசுந்தரம் செட்டியார்
க. சுந்தரவிநாயக முதலியார்
ச. நடேச முதலியார்
பி. தியாகராஜ பிள்ளை
திண்டிவனம். தங்கவேல் முதலியார்
ச. நமசிவாய முதலியார்
வே. தியாகராய முதலியார்
இராஜு கிராமணியார்

**வரவேற்புக் காரியதரிசி**

தெ. பழ. சித. சதாசிவ செட்டியார்

**மாதக் கணக்கு பரிசோதகர்**

க. இரத்தின முதலியார்

**ஆண்டுக் கணக்கு பரிசோதகர்**

ஈ. ந. தணிகாசல முதலியார்

**பத்திராசிரியக் கழகம்**

**பணியாளர் கழகம்**

தி. கு. கி. நாராயணசாமி நாயுடு
ஔவை. துரைசாமி பிள்ளை
பி. தியாகராஜ பிள்ளை
திரு. வி. உலகநாத முதலியார்
மா. துரைசாமி முதலியார்
பி. ஆலாலசுந்தரம் செட்டியார்
சி. எம். இராமச்சந்திர செட்டியார்
ம. பாலசுப்பிரமணிய முதலியார்
அ. சோமசுந்தர செட்டியார்

### ஆராய்ச்சிக் கழகம்

மு. கதிரேசச் செட்டியார்
கா. சுப்பிரமணிய பிள்ளை
ந. மு. வேங்கடசாமி நாட்டார்
ச. சச்சிதாநந்தம் பிள்ளை
ம. சுவாமிநாத சிவாசாரியார்

## வெளியூர் ஆலோசனை சபை

### செங்கற்பட்டு

கீ. நாராயணசாமி முதலியார்
வா. தி. மாசிலாமணி முதலியார்
கே. வி. அருணகிரி முதலியார்

### வடஆர்க்காடு

வடநாங்கூர் அருணசல முதலியார்
புரிசை. முருகேச முதலியார்
ஔவை. துரைசாமிப் பிள்ளை

### தென்ஆர்க்காடு

சொ. ராஜகோபால செட்டியார்
பு. வே. தேவராஜ முதலியார்
எம். சின்னசாமி ரெட்டியார்

### தஞ்சாவூர்

த. வே. உமாமகேசுவரம் பிள்ளை
ஐ. குமாரசாமி பிள்ளை
எஸ். சதாசிவ முதலியார்

### திரிசிராப்பள்ளி

எஸ். கனகசபாபதி பிள்ளை
பூவாளூர். அமிர்தம் செட்டியார்
அ. மு. சரவண முதலியார்

### இராமநாதபுரம்

வே. நா. இலக்குமண செட்டியார்
சாத்தூர். கந்தசாமி முதலியார்

### திருநெல்வேலி

தெ. ச. சு. சோமசுந்தரம்பிள்ளை
ந. சிவகுருநாத பிள்ளை
மா. வே. நெல்லையப்ப பிள்ளை

### மதுரை

கே. அரங்கசாமி முதலியார்
எஸ். முத்துகருப்ப பிள்ளை
எம். எஸ். பாண்டியன் பிள்ளை

### கோயன்புத்தூர்

சி. கே. சுப்பிரமணியமுதலியார்
சி. எம். இராமச்சந்திர செட்டியார்
ஜி. சுந்தரம் ஐயர்

### திருவிதாங்கூர்

ரா. பதுமநாப பிள்ளை

### பெங்களூர்

ஆ. அ. இரத்தினசபாபதி முதலியார்

### நீலகிரி

எஸ். முத்துராமலிங்கம்

### சேலம்

வே. கனகசபை
அ. மாணிக்கம்
சொ. அ. மணிவாசகம்

### புதுக்கோட்டை

வ. பழ. ச. சாமிநாதன் செட்டியார்

# சமாஜ விழா

[காரியதரிசி]

நமது சமாஜத்தின் முப்பத்துமூன்றும் ஆண்டு நிறை விழாவும் சைவர் மகாநாடும் கோயமுத்தூர் என வழங்கும் கோவன்புத்தூரில் முனிசிபல் ஹைஸ்கூல் மகா மண்டபத்தில் தென்னார்க்காடு ஜில்லா கல்வி அதிகாரி சைவத் திருவாளர் - ச. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் நிகழும் வெகுதானியஹு மார்கழிமீ கஙஉ (28-12-38) புதன்கிழமை முதல் மூன்று நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. முதல் நாட்காலை ஆறு மணிக்குக் கோட்டை சுப்பிரமணிய சுவாமி கோவில் என வழங்கப்படும் ஸ்ரீசங்கமேசுவரர் திருக்கோயிலில் கணபதி, சிவபெருமான், அம்மை, முருகர் சந்நிதிகளில் வழிபாடு நடைபெற்றது. பிறகு முருகர் சந்நிதியில் திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் எழுதிய குறிப்புரையோடு திருவாசகம் இரண்டாம் பதிப்பாகச் சமாஜத்தினரால் வெளியிடப்பட்டது. சமாஜக் காரியதரிசி பதிப்புரையை வாசித்த பின்னர் திருவாளர்கள்-ச. சச்சிதாநந்தம் பிள்ளை, C. K. சுப்பிரமணிய முதலியார், C. M. இராமச்சந்திர செட்டியார், G. சுந்தரம் ஐயர், P. சமரபுரி முதலியார் ஆகிய அன்பர்கள் திருவாசகத்தின் மேன்மை, இப்புத்துரையின் சிறப்பு முதலியன பற்றிப் பேசினார்கள். பிறகு திரு. அ. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் பாராட்டுரைகட்கு வந்தனமளித்தனர். பிறகு திருக்கோயிலிலிருந்து பேரவை மண்டபத்துக்குத் தலைவர், இளைஞர் தலைவர், வரவேற்புத் தலைவர் ஆகிய மூவரும் மோட்டாரில் மேளவாத்தியம், கொடிச்சீலை, யானை முதலிய விருதுகளுடன் ஊர்வலமாக வரவேற்கப்பெற்றனர். பேரவையில் திருமுறை முழக்கத்தோடு நிகழ்ச்சி தொடங்கப்பெற்றது. காரியதரிசி முன் மொழியவும் திரு. C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் பின் மொழியவும் தலைவர் தேர்தல் முடிந்து தலைவர்

தலைமையிருக்கையில் அமர்ந்தனர். பிறகு திரு. இராவ் பகதூர் C. M. இராமச்சந்திர செட்டியாரவர்கள் தாம் இயற்றிய வரவேற்புப் பாடலை வாசித்தனர் (கக-ம் பக்கம் பார்க்க) இதன் பிறகு வேறு சில சபைகளின் சார்பாகத் தலைவர் அவர்கட்கு வரவேற்புப் பாடல்கள் வாசித்து வழங் கப்பெற்றன. பின்னர் திரு - C. K. சுப்பிரமணிய முதலியா ரவர்கள் தமது வரவேற்புத் தலைமையுரையை நிகழ்த்தினார் கள். (முதல் பக்கம் பார்க்க) இதன் பிறகு காரியதரிசி சமாஜ ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்தனர் (ருக-ம் பக்கம் பார்க்க). இது நிறைவேறியவுடன் தலைவர் தமது தலைமைப் பேருரையை நிகழ்த்தினார்கள் (இதன் சுருக்கத்தை ரு.கூ-ம் பக்கத்திற் காண்க). பிறகு கடவுள் வாழ்த்துடன் முதல் நாட் காலைப்பகுதி முடிந்தது.

மீண்டும் பிற்பகல் மூன்றுமணிக்குப் பேரவை கூடிற்று. கடவுள் வணக்கமும் தலைமைப் பேருரையின் பிற்பகுதியும் முடிந்த பின்னர் திருவாளர்கள், பூ. சமரபுரி முதலியார், த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, அ. வரதநஞ்சைய பிள்ளை ஆகிய அன்பர்கள் முறையே, "சைவர்களின் தற்காலக் கடமை", "உலகப் போக்கும் சைவாசிரியர்களும்", "கொங்கு நாட்டிற்கு மூவர் தந்த கட்டளைகள்" என்னும் செம்பொருள்கள் பற்றிப் பல அரிய மேற்கோள்களோடும் சிறந்த அநுபவச் சான்றுகளோடும் மிகத் திறமையாகவும் விரிவாகவும் பேசிமுடித்தார்கள். பிறகு தலைவர் விரிவாகத் தமது கருத்துரையைத் தெரிவித்தனர். கடவுள் வாழ்த் துடன் இரவு ஒன்பது மணிக்கு முதல்நாட் கூட்டம் முடி வுற்றது.

இரண்டாம் நாள் முற்பகலில் இளைஞர் மகாநாடு நடை பெற்றது. (இதன் நிகழ்ச்சிக்குறிப்பை சுo-ம் பக்கத் திற்காண்க.) பிற்பகல் மூன்று மணிக்கு மீண்டும் பேரவை தொடங்கிற்று. திரு. பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியா ரவர்கள் "சமயத்திற்காணும் உயர்ந்த தத்துவங்கள்" என் பதுபற்றிப் பல அரிய கருத்துக்களை விளக்கித் தமக்குத் தரப்பட்ட ஒரு மணி நேரத்திற் சரியாகப்பேசி முடித்தார்

கள். பிறகு தலைவரவர்கள் தமது கருத்துரையை மிக விரி
வாக ஒன்றரை மணிநேரம் வரையில் விளக்கினார்கள். பிறகு
முத்தமிழ்ப் பெருஞ்சொற்கொண்டல் திரு. புரிசை முருகேச
முதலியாரவர்கள் "சைவ புராணங்களில் தமிழர் அறியக்
கூடிய செய்திகள்" என்பது பற்றி ஏறக்குறைய மூன்று
மணிநேரம் மண்சுமந்த திருவிளையாடல், அப்பூதியடிகள்
சரிதை, முருகன் திருவவதாரம் என்பவற்றை விரிவாக
விளக்கிப் புராணங்களில் நாம் அறியக்கூடியவை இன்னின்ன
வென்று தெரிவித்தார்கள். இச்சொற்பொழிவின் இடையில்
திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்களைத் தலைமையிலிருத்தித்
தலைவரவர்கள் தாம் பேரூரில் தரிசனம் செய்து சொற்பொழி
வாற்ற விடைபெற்றுச் சென்றார்கள். இரவு எட்டரை
மணிக்குக் கடவுள் வாழ்த்தொலி முழங்க இரண்டாம் நாட்
கூட்டம் நிறைவுற்றது.

மூன்றாம் நாட்காலை சமாஜ உத்தியோகஸ்தர் தேர்தல்
நடைபெற்றது. (இதன் முடிவை ௫௪-ம் பக்கத்திற்
காண்க.) பிறகு ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இதிற்சில
தீர்மானங்கள் ஆலோசிக்கப்பட்டன. இதன் பின்னர்
பேரவை தொடங்கிற்று. தூத்துக்குடி சித்தாந்த போத
காசிரியர் திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் "தற்கால
வினாக்களுக்கு முற்கால விடைகள்" என்பது பற்றித்
தகுந்த மேற்கோள்களோடு சிவஞான சித்தியாரிலுள்ள பல
பாடல்களை ஆதாரமாகக்கொண்டு விரிவாக விளக்கினார்கள்.
பின்னர் அடுத்த ஆண்டு விழாவையும் சைவர் மகாநாட்டை
யும் தாம் நடத்துவதாக அழைத்த கொத்தமங்கலம் திரு.
தெ. பழ. சித. சதாசிவம் செட்டியார் அவர்கட்குக் காரிய
தரிசி நன்றி கூறி மாலை சூட்டினர். பிறகு சமாஜம் நடத்திய
சைவத்தேர்வுகளில் வெற்றி பெற்றவர்கட்குப் பட்டமளிப்பு
நிகழ்ந்தது. பிறகு திரு. பழனியம்மாள் அவர்கள் "சைவப்
பெண்ணடியவர்" என்னும் செம்பொருள் பற்றிக் காரைக்
காலம்மையார், திலகவதியார், மங்கையர்க்கரசியார் முதலிய
வர்கள் வரலாற்றைத் திறம்பட விளக்கி, விரித்துரைத்தார்

கள். தலைவர் கருத்துரை, கடவுள் வாழ்த்துடன் மூன்றும் நாட் காலைக்கூட்டம் முடிந்தது.

மாலை மூன்று மணிக்கு மீண்டும் பேரவை தொடங்கிற்று. சாத்தூர் - திரு. ஏ. எஸ். கந்தசாமி முதலியாரவர்கள் "சமயமும் விஞ்ஞான கலையும்" என்பதுபற்றி மேல்நாட்டு ஆராய்ச்சி முடிபுகளையும் நமது சமயக் கொள்கைகளையும் ஒப்பிட்டு ஆய்ந்து பல சிறந்த உண்மைகளை விளக்கினார்கள். பிறகு பேரவையினர் எழுதி விடுத்த பல வினாக்களுக்குத் தலைவரவர்கள் திறமையான விடைகள் கூறி அனைவரையும் மகிழ்வித்தார்கள். இவ்வினாவிடை முறை சமாஜ விழாவில் முதன் முறையாக இப்போதே கையாளப்பட்டது. பிறகு திரு. C. M. இராமச்சந்திர செட்டியார் சில தீர்மானங்களைப் பிரேரேபித்தார்கள். திரு. C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் ஆமோதித்தபின்னர் இவை நிறைவேறின. (இவை அடுத்த இதழில் வெளிவரும்.) பிறகு தலைவர், இளைஞர் தலைவர், வரவேற்புத் தலைவர், வரவேற்புக் காரியதரிசி, வரவேற்புக் கழகத்தினர் முதலியோருக்கும், கோவை சேக்கிழார் தேவார பாடசாலையினருக்கும் சமாஜக் காரியதரிசி நன்றி கூறினார். பிறகு திரு. C. M. இராமச்சந்திர செட்டியாரவர்கள் தலைவர்கள், சமாஜத்தினர், வரவேற்புக் கழகத்தினர், தொண்டர்கள் முதலிய அனைவருக்கும் நன்றி கூறி நன்றிப் பாமாலையும் படித்தனர். பிறகு தலைவர் தமது முடிபுரையை மிகுந்த ஆர்வத்தோடும் உருக்கத்தோடும் விரிவாக நிகழ்த்தினார்கள். கடவுள் வாழ்த்தொலி யாண்டும் ஆர்த்தெழ மகாநாடு இனிமையாக இரவு ஒன்பது மணிக்கு முற்றுப் பெற்றது. சுபம்!

# சைவ இளைஞர் மகாநாடு

[ரா. கிருஷ்ணமூர்த்தி, பி. ஏ.]

கோவையில் முனிசிபல் ஹைஸ்கூல் மண்டபத்தில் 29-12-38 காலை 9-மணிக்கு இளைஞர் மகாநாடு கூடிற்று. மகாநாட்டுத் தலைவர் சைவப்புலவர் திரு. மணிவாசகனார் அவர்கள் தேவார பஜனையுடன் அவர்களது இருக்கையிலிருந்து மகாநாட்டு மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். உடனே தேவார பாடசாலை சிறுவர்களால் தேவாரம் பாடப்பட்டது. பிறகு திரு. நடராஜன், B. A., B. L. அவர்கள் தலைவரை பிரேரேபிக்க, திரு. M. K. பொன்னுசாமி, B.A. அவர்கள் ஆமோதிக்க, தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். தலைவர் தலைமைஆசனம் வகித்தார். வரவேற்பு வாழ்த்துப்பாவும், (பக்கம் உஉ) வரவேற்புத்தலைவர் பேச்சும் (பக்கம் உங) அடங்கிய பிரதிகள் சபையோர்க்கு வழங்கப் பெற்றன. திரு. R. மகாதேவன் வரவேற்பு வாழ்த்துப்பா பாடியபிறகு திரு. R. கிருஷ்ணமூர்த்தி, B. A. அவர்கள் தமது வரவேற்புத் தலைவருரையை வாசித்தனர். பிறகு தலைவர் திரு. மணிவாசகனார் தம் தலைமையுரையை (பக்கம் உக) வாசித்தார். வாசிக்கையில் ஆங்காங்கு பல அபிப்பிராயங்களை விளக்கிக் கொண்டே சென்றார்.

இதன் பின் அடியிற்கண்ட உபந்நியாசங்கள் நடைபெற்றன :—(1) "ஆலயப் பிரவேசம்" என்னும் பொருள் பற்றித் திரு. இராமையன் அவர்கள் பேசினார்கள். (2) "சைவ வாலிபர்களும் தற்காலமும்" என்னும் பொருள்பற்றித் திரு. S. V. பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசினார்கள். அவர்கள் "தயாள்பாக்" என்ற தாபனத்தை வடநாட்

டிலே ஏற்படுத்திய பெரியார் காட்டிவந்த முயற்சிகளை உதாரணங்களாக எடுத்துரைத்தார்கள். (3) "இளைஞர் வளர்ச்சிக்கு நாம் செய்யவேண்டிய கடமை" என்னும் பொருள் பற்றி திரு. B. சோமசுந்தரம், B. A. அவர்கள் பேசினார்கள். (4) "நாத்திகம் போக்கச் செய்யும் முறைகள்" என்னும் பொருள்பற்றித் திரு. P. S. ஸ்ரீநிவாசன், B. A., B. L. அவர்கள் பேசினார்கள். அவர்களுடைய பேச்சில் கம்பர், ஆழ்வார்கள் முதலிய பெரியோர்கள் பாடல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக்காட்டினார்கள். (5) "நமது சமயம் ஆக்கிரக சமயமாய் இராமல் ஆக்ர்ஷ சமயமாய் இருத்தல்வேண்டும்" என்னும் பொருள்பற்றித் திரு. C. வீரபத்திரன் அவர்கள் பேசினார்கள். (6) பிறகு சபையிலிருந்து திரு. ஐயாசாமி என்ற ஒரு வாலிபர் தாமும் பேசவேண்டும் என்று விரும்பவே தலைவர் அனுமதித்தார். அவர் "நமது கடமை" என்ற பொருள்பற்றி ஆவேசத்துடன் பேசினார். (7) "விஞ்ஞான கலையும் சமயமும்" என்ற பொருள்பற்றி திரு. V. பொன்னுசாமி, B. A. (Hons.) அவர்கள் பேச, அதனுடன் உபந்நியாசங்கள் முடிந்தன.

பிறகு அடியிற் காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) "சென்னை அரசாங்கத்தாரது ஆலயப்பிரவேச மசோதாவானது சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு உடந்தையாயுள்ளது." —**திரு. இராமையன்.**

(2) "சமயக்கல்வியும் விஞ்ஞான கலைப்பயிற்சியும் அறிவு வளர்ச்சிக்கு அவசியம் ஆனவை; ஒன்றுக்கொன்று எதிரல்ல." —**திரு. V. பொன்னுசாமி, B. A. (Hons)**

(3) "சைவசமயம் சிறக்கச் சைவ இளைஞர்களாகிய நாம் ஆங்காங்கு பிரசாரங்களைச் செய்யவேண்டும்." —**திரு. M. K. பொன்னுசாமி, B. A.**

(4) "நாத்திகம் கூடாது; நாத்திகத்தை அழித்து இளைஞர்களிடை சைவப்பற்றைப் புகட்டல் வேண்டும்"—திரு. P. S. ஸ்ரீநிவாசன், B. A. B., L.

(5) "நமது சைவப் பெரியோர்கள் நமக்குப் போதித்த ஒழுக்க வழக்கங்களைப் பொன்போல் காப்பாற்றி உலகில் பரவச் செய்ய வேண்டும்"—திரு. நடராஜன், B. A. B. L.

(6) "பாடசாலைகளில் வாரத்திற்கு ஒரு முறை சமயச்சார்பான பாடங்களை மாணவர்களுக்குப் போதிப்பதற்காக பாடசாலை அதிகாரிகள் ஏற்பாடுகள் செய்யவேண்டும்"—திரு. R. கிருஷ்ணமூர்த்தி, B. A.

பிறகு தலைவர் பின்னுரையை நிகழ்த்தினார்கள். அப்போது அவர்கள் முன் பேசிய உபந்நியாசங்களைப் பற்றிச் சுருக்கமாகத் தம் அபிப்பிராயங்களை எடுத்துச் சொன்னார்கள். மற்றும் அவர்கள் அரசியல் என்னும் பெயரினாலே சில பிரசங்கியார்கள் சமயத்தை எதிர்த்துப் பேசும் முறைகளைக் கண்டித்தார்கள். சிறுவர்கள் சமயத்தில் ஈடுபட வேண்டிய அத்தியாவசியத்தைப் பெரிதும் பாராட்டித் தம் பின்னுரையை முடித்தார்கள். தலைவர் முடிப்புரை மிகவும் உருக்கமாகவும் அழுத்தமாகவும் இருந்தது. சபையோர்களில் அவ்வுரை ஆழ்ந்த கிளர்ச்சியை உண்டுபண்ணிற்று.

இறுதியில் சைவ இளைஞர் சங்கத்து அமைச்சர் திரு. நடராஜன், B.A. B.L. அவர்கள் தலைவருக்கும், உபந்நியாசகர்களுக்கும் மற்றெல்லாருக்கும் நன்றி கூறினதும் தேவாரம் ஓதின பின் மகாநாடு இனிது கலைந்தது.

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

# விரிவுரைக் கூட்டம்

---

நிகழும் வெகுதானிய, கார்த்திகை, கஉ (27-11-'38) ஆம் நாள் ஞாயிறு மாலை மணி ரு-க்குத் தஞ்சைக் கரந்தைத் தமிழ்ப் பெருமன்றத்தில் தோரமங்கலம் திருவாளர் ஆசிரியர் - அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள் "தமிழ் மொழியும் கவிஞர் பெருமையும்" என்ற பொருள்பற்றித் தெள்ளிய தமிழ்நடையில் செவிக்கினிய சொற்பொழிவாற்றினார்கள்.

கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவ முதலிய மொழிகளுக்குத் தாயென விளங்குந் தகவும், பிற மொழியருங் கலைகளைத் தன் கண் உடைத்தாதற்கேற்ற பெருமையும், பூவலம் படச்சுழலல் போன்று வலம் படவெழுத்தும், சுருங்கச் சொல்லல் என்னும் வனப்பும் பெற்றது தமிழ் மொழி யென்றும், அன்பே கடவுள் என்னும் உண்மையினை யுணர்த்தி அன்பினை யகத்தும் வீரத்தினை புறத்துங் கொண்டு மக்களை வாழ்விப்பன இம்மொழியின் நூல்களே யென்றும், இயற்கைப் பொருள்களைக் கூர்ந்து நோக்கு முயர்வும், கரிசற்றவுள்ளப் பண்பும், பொருளெதிர் நோக்காது புரவலர்க்கு அற்றம் நோக்கி யறிவுரை கூறி அவர் கண் தீயன கண்டபோது அவரை யிடித்துரைத்துத் திருத்து மியல்புங் கொண்டு அரசரும் மக்களும் ஒருங்கு போற்ற வறுமையிற் செம்மை பெற்று வாழ்ந்த கவிஞர்கள் பண்டைத் தமிழ்ப் புலவர்களே யென்றும் ஆசிரியரவர்கள் தம் சொற்பொழிவிற் குறிப்பிட்டார்கள்.

முடிபு:—I தமிழ்ப்புலமை மிக்கவரும், தனது வாணாள் முற்றும் தமிழ்த் தொண்டிற்காக்கி உழைத்தவரும் " கலா

நிலைய" மென்னும் செந்தமிழ்த்தாளை நடத்திவந்தவருமாய திருவாளர் T. N. சேஷாசலமையர் அவர்கள் (B. A. B. L., வழக்கறிஞர், சென்னை.) இளவயதிலேயே உலக வாழ்க்கையை நீத்த செய்தி இச்சங்கத்தினர்க்கு அளவிடற்கரிய துயரை விளைத்தது. திரு. ஐயரவர்களின் மனைமக்கட்கு இச்சங்கத்தின் இரங்கலைத் தெரிவிப்பதெனமுடிவு செய்யப் பெற்றது.

முடிபு:—II தனித்தமிழ்ப் பல்கலைக் கழகத்தாலாவன வெல்லாம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால் முடியுமென அரசியலார் உறுதி கொண்டு ஆக்கியதும், இப்பல்கலைக் கழகத்தின் தலைவர்கள் தமிழ் வளர்ச்சியைச் சிறந்த முறையிற் பேணுவது இக்கழகத்தின் முக்கிய நோக்கமெனக் கூறிவந்ததும், கலைநூல்கள் அனைத்தையும் தமிழ் மொழியில் கற்பிக்கும் பொருட்டு அவற்றைத் தமிழில் மொழிபெயர்க்கத் தொடக்குமாறு கழகப் பேரவையினர் முடிவு செய்ததும் ஆகிய இக்கோட்பாடுகளைப் புறக்கணித்து, தமிழ் மொழிக்கென இக்கழகத்தில் சிறப்புரிமை யாதுமின்றென வன்கண்மையுடன் பல்கலைக் கழகத்தின் பேரவையில் அழிவழக்குப் பேசிய கழகத்துணை வேந்தர் கனம் திருவாளர் V. S. சீனிவாச சாத்திரியாரின் கொடுஞ் செயலை இச்சங்கம் வன்மையுடன் கண்டிக்கிறது. இம்முடிபை உரியவர்கட்கு அனுப்புவதெனமுடிவு செய்கிறது.

மேற்கண்ட இருமுடிபுகளையும் ஒருமையொடு நிறைவேற்றிய பின்னர் அமைச்சரவர்கள் நன்றிகூறக் கூட்டம் இனிது நிறைவேறியது.